REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK
E Paper
மின்னிதழ்
2024 மே 18 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
92
1932–2024 ANNIVERSARY
තිනකරන්
வரு. 92 இல. 118 | Saturday 18, May, 2024 | 11 பக்கங்கள் | 50/-

## பாராளுமன்றம் கலைப்பு; அடிப்படையற்ற தகவல்கள்

**சபாநாயகர்**



பாராளுமன்றம் கலைக்கப்படுமென வெளியாகும் தகவல்கள் அடிப்படையற்றவையென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். நாடு நல்லதொரு நிலையை அடைந்ததன் 06

## ஜனாதிபதி 24ஆம், 25ஆம் திகதிகளில் வடபகுதிக்கு இரண்டு நாள் விஜயம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 24ஆம், 25ஆம் திகதிகளில் இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு வடமாகாணத்துக்கு செல்லவுள்ளார்.

ஜனாதிபதியின் இவ்விஜயம் தொடர்பான ஏற்பாடுகளை முன்னெடுத்து வரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அது தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்து ஆளுநர் அலுவலகத்தில் துறைசார் தரப்பினர்களுடன் கலந்துரையாடலை முன்னெடுத்துள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ள நிகழ்வுகள் நடைபெறவுள்ள இடங்களையும் நேற்று (17) நேரில் சென்று அமைச்சர் பார்வையிட்டார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்காக யாழ். நகரில் புதிதாக கட்டப்பட்ட எட்டு மாடிகளை கொண்ட மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சித் தொகுதி கட்டடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

வட மாகாணத்துக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி 06

### சிரேஷ்ட பிரஜைகளின் வைப்புகள்

## வட்டி வீத அதிகரிப்பு ஆலோசனை குழு அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு



**அடுத்த வாரம் வழங்க ஏற்பாடு**

சிரேஷ்ட பிரஜைகளின் வைப்புகளுக்கான வட்டி வீதத்தை அதிகரிப்பது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுக் கூட்டம், நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையில் நிதி அமைச்சில் நடைபெற்றது. இந்த குழுக் கூட்டம் தொடர்பான அறிக்கை அடுத்த வாரம் 06

### கிழக்கு ஆளுநர் செந்திலுக்கு

## தொலைபேசியில் ஜனாதிபதி வாழ்த்து தெரிவிப்பு





கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆளுநராக பொறுப்பேற்று நேற்றுடன் ஒரு வருடம் நிறைவடைந்துள்ளதுடன், அவர் தமது பணிகளை சிறப்பாக முன்னெடுத்தமைக்காகவும் தொடர்ந்தும் ஆளுநர் செந்தில் தொண்டமான் தனது கடமைகளை திறம்பட செய்வதற்காகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொலைபேசி ஊடாக தனது 06

## AI Grow நிறுவனத்தின் (AI) பசுமை இல்லத்தில் ஜனாதிபதி



இலங்கையில் முதன்முறையாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் கேகாலை நெலுந்தெனிய பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வேகா காரை உருவாக்கிய கலாநிதி ஹர்ஷ சுபசிங்கவின் பசுமை இல்லத்தை பார்வையிடுவதற்காக நேற்று (17) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சென்ற போது பிடிக்கப்பட்ட படம். AI Grow நிறுவனத்தினால் (AI) பசுமை இல்லம் மற்றும் திறந்த பயிர்ச்செய்கை உள்ளிட்ட இரு பிரிவுகளும் தானியக்க முறைமையில் இங்கு முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

### பொருளாதார மேம்படுத்தல் திட்டம்

# இலங்கையின் செயல் திறனுக்கு சர்வதேச நாணய நிதியம் பாராட்டு

**பணவீக்கம் விரைவாக குறைந்தமை, வலுவான சேமிப்பு குவிப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியின் ஆரம்ப அறிகுறிகள் முதலானவை பாராட்டத்தக்க முன்னேற்றங்கள் என்றும் தெரிவிப்பு**

இலங்கையின் பாராட்டத்தக்க பாரிய பொருளாதார கொள்கைகள், விரைவாக பணவீக்கம் குறைந்தமை மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி ஆகியவை முக்கிய கவனத்துக்குரிய விடயங்களென சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

வொஷிங்டன் நகரில் கடந்த வியாழக்கிழமை (16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட சர்வதேச நாணய நிதியத்தின் தகவல் தொடர்பு பணிப்பாளர் ஜூலி கோசாக் (Julie Kozack) இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் ,

இலங்கையின் பொருளாதார செயல்திறனை பொறுத்தமட்டில் இலங்கையில் பேரண்ட பொருளாதார கொள்



கைகள் மூலமான பயன்கள் கிடைக்க ஆரம்பித்துள்ளதாக தெரிவித்தார்.

பணவீக்கம் விரைவாக குறைந்தமை, வலுவான சேமிப்பு குவிப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியின் ஆரம்ப அறிகுறிகள் முதலானவை பாராட்டத்தக்க முன்னேற்றங்கள் என்று தெரிவித்த அவர், நிதி கட்டமைப்பில் ஸ்திரத்தன்மையை பாதுகாக்கும் அதேவேளையில் பொருளாதார வளர்ச்சியின் ஆரம்ப அறிகுறிகளாக இவை அமைந்திருப்பதாகவும் கூறினார்.

ஒட்டுமொத்த நிரல் செயல்திறன் வலுவாக அமைந்துள்ளதாக குறிப்பிட்ட அவர், நான்கு வருட The Extended Fund Facility ஆதரவு திட்டத்தி 06



03

## பிரிட்டனின் Ipswich நகரின் மேயராக இலங்கை தமிழர்

### சப்ரகமுவ தமிழ்மொழி பாடசாலைகளில்

## பட்டதாரி ஆசிரியர்களுக்கு அதே மாகாணத்தில் நியமனம்

**அமைச்சர் ஜீவன் நம்பிக்கை வெளியீடு**



சப்ரகமுவ மாகாணத்துக்குரிய தமிழ்மொழி பாடசாலைகளுக்கு அதே மாவட்டத்திலுள்ள பட்டதாரி ஆசிரியர்களை உள்வாங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமென நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்ட தமிழ்மொழி பாடசாலைகளுக்கு அந்த மாவட்டத்திலுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் புறக்கணிக்கப்பட்டு வெளி மாவட்ட பட்டதாரி ஆசிரியர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். 06

## வடக்கின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்க தயார்

**வடக்கு ஆளுநரிடம் அமெரிக்க தூதுவர் உறுதி**

வடக்கு மாகாண அபிவிருத்திக்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்கத் தயாரென வட மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸிடம் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நேற்று உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், வட மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸை யாழ். நகரில் 06




## தோல்வி கண்ட நாடு ஜனாதிபதி ரணிலினாலேயே மீண்டெழுந்தது

**வெளிநாடுகள் பல உதவ அவரே காரணம்; -குமரகுருபரன்**

மக்களின் அடிப்படைத் தேவைகளை நிலைநாட்ட முன்வரத் தவறியவர்கள், இப்போது மக்களின் வாழ்வாதாரத்தையும் நாட்டையும் காப்பாற்ற தேச பக்தர்கள் என்ற தகுதியுடன் முன்வந்த தேசப்பற்றுள்ள திறமையான தலைமைக்கு எதிராக போராடுவது கேலிக்குரியதென கலாநிதி என்.குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

மக்களை காப்பாற்ற பொருளாதார நெருக்கடி மேலாண்மைக்கான சர்வதேச உதவியை 06





03

### யாழ். மிருசுவில் படுகொலை சம்பவம்

## மரண தண்டனை கைதிக்கு பொதுமன்னிப்பு வழங்கியது எவ்வாறு?

## பாடசாலை மாணவர்களுக்கு மீண்டும் 'சுரக்ஷா' காப்புறுதி

**விரைவில் நடைமுறைப்படுத்த திட்டம்**

**முன்னாள் எம்.பி. ஆஷு மாரசிங்க**



பாடசாலை மாணவர்களுக்கு நன்மை பயக்கும் சுரக்ஷா காப்புறுதி திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆஷு மாரசிங்க தெரிவித்துள்ளார். 06

### முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்

## கைதான நால்வரும் பிணையில் விடுதலை



திருகோணமலையில் மூதூர், சேனையூர் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நான்கு பேருக்கும் மூதூர் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை (17) பிணை வழங்கி விடுதலை செய்துள்ளது. இவ்வழக்கு நகர்த்தல் பத்திரத்தின் மூலம் நேற்று விசாரணைக்காக மூதூர் 06

### தைபொய்ட் பக்டீரியா தொற்று பரவும் அபாயம்

## முடிந்தவரை வீட்டில் சமைத்த உணவு, பானங்களை பெறவும்

**சுகாதார பிரிவினர் அறிவுறுத்தல்**

மக்கள் மத்தியில் தைபொய்ட் பக்டீரியா தொற்று பரவும் அபாயம் இருப்பதாக சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தைபொய்ட் பக்டீரியா தொற்று மலக் கழிவுகளால் உருவாகுவதுடன், அதனால் பாதிக்கப்பட்ட நபரின் மலத்திலிருந்து மற்றொரு நபருக்கு நோய் பரவுவதாக சுகாதார 06

## மே 20ஆம் திகதிக்கு முன் விவாதம் நடத்த திகதி அறிவிக்க வேண்டும்

**இல்லையேல் விவாதம் பற்றி கிராமங்களில் பேசக்கூடாது**



விவாதத்துக்கான திகதியொன்று மே மாதம் 20ஆம் திகதிக்கு முன் வழங்கப்படா விட்டால், இனிமேலும் விவாதம் பற்றி கிராமங்கள் தோறும் சென்று அங்குள்ள ஆரம்ப பாடசாலை மாணவர் மத்தியில் பிதற்ற வேண்டாமென எதிர்க்கட்சித் தலைவருக்கு தேசிய மக்கள் கட்சியின் நிறைவேற்று உறுப்பினர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர் 06

### G.C.E. O/L புவியியல் பரீட்சையில்

## வினாத்தாள் விநியோகிப்பதில் அநீதி இழைக்கப்படவில்லை

**விசாரணை ஆரம்பம்**

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
Department of Examinations - Sri Lanka

கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சையில் மாணவர் சிலருக்கு புவியியல் வினாத்தாளின் ஒரு பகுதியை வழங்காத சம்பவம் தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் விசாரணை ஆரம்பித்துள்ளது.

மினுவாங்கொடை அல் அமீன் முஸ்லிம் கல்லூரியில் பரீட்சை நிலையத்தில் பணிபுரிந்த அதிகாரிகளிடம் பரீட்சைகள் திணைக்களம் இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புவியியல் பரீட்சைக்கு தோற்றிய பரீட்சார்த்திகள் 06

### முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய்

## மனித புதைகுழி அகழ்வுப்பணிகள் ஜூலை 04 இல் மீண்டும் ஆரம்பம்

**முல்லைத்தீவு நீதிமன்றம் அறிவிப்பு**

முல்லைத்தீவு நிருபர்



முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப்பணிகள் எதிர்வரும் ஜூலை மாதம் 04ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படுமென முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றம் அறிவித்துள்ளது. 06

### எல்லை தாண்டிய குற்றச்சாட்டில்

## இலங்கை மீனவர்கள் 14 பேர் இந்திய கடற்படையால் கைது



சர்வதேச கடல் எல்லையை தாண்டியதற்காகவும், மீன்பிடித்ததற்காகவும் ஐந்து படகுகளுடன் 14 இலங்கை மீனவர்களை இந்திய கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இந்திய கடற்பரப்புக்குள் 07 கடல் மைல் தொலைவில் தென்கிழக்கே 13 கடல் மைல் தொலைவில் 14 இலங்கை மீனவர்களை கடந்த வியாழக்கிழமை கைது செய்துள்ளதுடன், ஐந்து இலங்கை மீன்பிடி படகுகளை கைப்பற்றியுள்ளதாகவும் இந்திய கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன. 06

# சீதையம்மன் ஆலயத்துக்கு அயோத்தியிலிருந்து புனித நீர் வருகை















சீதாஎலிய கோயிலின் வருடாந்த மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (19) மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு அயோத்யா இராம ஜனம் பூமி அறக்கட்டளையின் பிரதிநிதிகளாக இலங்கை வந்துள்ள ஸ்ரீஅவிநாஸ் திருப்பாத்தி தலைமையிலான குழுவினர், அயோத்தி நகரிலிருந்து கொண்டு வரப்பட்ட புனித கங்கை நீர், புனித மண் ஆகியவற்றை நேற்று முன்தினம் (16) அறங்காவலர் சபைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி வே.இராதாகிருஸ்ணனிடம் கையளித்து வைத்துள்ளனர். அத்துடன் கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்ளும் பக்தர்களுக்காக திருப்பதி ஆலயத்திலிருந்து ஐயாயிரம் லட்டுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.




## இலங்கை வரும் குருதேவ் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் ஜி பல நிகழ்வுகளில் பங்கேற்கிறார்



சீதாஎலிய அம்மன் கோயில் கும்பாபிஷேக நிகழ்வில் கலந்துகொள்வதற்காக இலங்கை வரும் வாழும் கலை அமைப்பின் நிறுவுனர் குருதேவ் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் ஜி, பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (19) காலை 9.00 மணிக்கு சீதாஎலிய அம்மன் கோயில் கும்பாபிஷேக நிகழ்விலும், அன்றையதினம் மாலை 6.00 மணிக்கு கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெறும் சத்சங்கம் நிகழ்விலும் மறுநாள் திங்கட்கிழமை திருகோணமலையில் நடைபெறும் நிகழ்விலும் கலந்துகொள்ளவுள்ளார்.




தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 மே 18 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்
சுபஹ் - 04.34
ளுஹர் - 12.08
அஸர் - 03.30
மஃரிப் - 06.20
இஷா - 07.34

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் வைகாசி 05
ராகுகாலம் : காலை : 8.53 - 10.23வரை
சுபநேரம் : பகல் : 2.53 - 4.23வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# அரச துறையில் ஊழலை தடுக்க புதிய வேலைத்திட்டம் ஆரம்பம்

## பாராளுமன்ற உறுப்பினர் ஜகத்குமார சுமித்ராரச்சி



ஊழல் மோசடிகளை தடுப்பதற்கு தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் முறைகள் மூலம் கொடுக்கல், வாங்கல்களை மேற்கொள்ளும் வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ஜகத்குமார சுமித்ராரச்சி தெரிவித்தார்.

அரசியல் பொறிமுறையால் கொள்கை வகுக்க மாத்திரமே முடியும் எனவும் அந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த அரச உத்தியோகத்தர்கள் மக்களுக்கான தமது கடமையை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (17) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஜகத்குமார சுமித்ராரச்சி,

“வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு இதுவரை பொதுமக்களின் நலன்களுக்காக பாரிய பணிகளை செய்துள்ளது. வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்க பொறிமுறையை வலுப்படுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். அது தொடர்பாக அரசதுறையின் செயல்பாடு குறித்து துறைசார் மேற்பார்வைக் குழு ஆய்வு செய்து வருகிறது.

இதன்போது உயர் நீதிமன்றம் உள்ளிட்ட நீதித்துறைக் கட்டமைப்பு, அமைச்சுகள் போன்ற அனைத்து அரச நிறுவனங்களின் வருடாந்த செயல்திறன் அறிக்கைகளை ஆய்வு செய்கிறோம்.

ஆனால் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகளின்படி சில நிறுவனங்களின் செயல்திறன் 23 வீதமாகவே இருக்கிறது.

இதற்கான காரணங்கள் குறித்து விசாரணை மேற்கொண்ட போது, பல்வேறு பதில்கள் கிடைத்தன. எவ்வாறாயினும் இந்நிலைமையை தவிர்க்கும் வகையில் அண்மையில் பாராளுமன்றத்தில் சபாநாயகர் தலைமையில் அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண, மாவட்ட, பிரதேச செயலாளர்கள் உட்பட மக்களுடன் நெருக்கமாக செயற்படும் அரச அதிகாரிகளுக்கான விசேட செயலமர்வொன்று நடத்தப்பட்டது.

அதன்போது மக்களுக்கு எவ்வாறு திறமையான மற்றும் நட்புறவான சேவையை வழங்குவது என்பது குறித்து அவர்களுக்கு தெளிவூட்டப்பட்டது. மேலும் மக்களுக்கு தங்கு தடையற்ற சேவையை வழங்க அரச ஊழியர்கள் கடமைப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்கியது. அடுத்த வருடமும் சம்பளம் அதிகரிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைக்கும் அரச ஊழியர்கள், மக்களுக்கான கடமையை முறையாக நிறைவேற்ற வேண்டும்.

06

# பிரிட்டனின் Ipswich நகரின் மேயராக இலங்கை தமிழர்



பிரிட்டனின் Ipswich நகரின் புதிய மேயராக முதல் முறையாக புலம்பெயர் இலங்கைத் தமிழரான இளங்கோ கே.இளவழகன் நியமிக்கப்பட்டுள்ளார்.


தொழில் ஆணையாளராக பதவி வகிக்கும் இளங்கோ கே.இளவழகன், Ipswich மாநகராட்சியின் வருடாந்தக் கூட்டத்தில் அதிக வாக்குகளை பெற்று மேயராக இளங்கோ கே.இளவழகன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில், "நான் இன்று மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். இந்த பெரிய நகரத்தின் மேயராக நியமிக்கப்பட்டமைக்கு மிகவும் பெருமைப்படுகிறேன்" என இளங்கோ இளவழகன் குறிப்பிட்டுள்ளார்.

அதே சமயம் வேட்புமனுவை முன்மொழிந்த நகராட்சி தலைமை ஆளுநர் நீல் மெக்டொனால்ட், தான் பதவியிலிருக்கும் ஆண்டில் பொதுத் தேர்தல் முடிவை இளங்கோ இளவழகன் அறிவிப்பாரென அறிவித்துள்ளார்.

# தினகரன் 92 வருடங்களுக்கு முன் தினகரன்

இன்று 18 மே 1932


அகழிக்குள் நடந்த இரு மரணங்கள்
உயிரோடு புதைக்கப்பட்ட போர்மனும் தொழிலாளியும்
கவலையீனமா காரணம்?
என்ஜினியர் கம்பெனியின் அத்தியட்சகர் மீது வழக்கு
மேலதிகமான விசாரணை ஒத்திப் போடப்பட்டது
கண்டி. திங்கட்கிழமை
ஏப்ரல் மீ 30-ந் திகதி சனிக்கிழமை யன்று கண்டியில் உள்ள குவீன்ஸ் ஹோட்டலில் சில குழாய்களைப் பதிக்கும் வேலையை ஏறக்குறையப் பன்னிரண்டு அடி ஆழமுள்ள அகழிக்குள் நின்று செய்துகொண்டிருந்த இரு தொழிலாளர்கள் மீது மண் இடிந்துவிழ அவர்கள் அதற்குள் உயிரோடு புதைக்கப்பட்டு உயிர்துறந்த செய்தி தினகரன் மே மீ 2ந் திகதி இதழில் வெளிவந்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அம் மரணங்கள் சம்பந்தமாக இன்றைய தினம் கண்டிப் பொலீஸ் கோட்டில் நடைபெற்ற வழக்கு விசாரணை பின்வருமாறு :—
மூவர் கூறிய சாக்ஷியங்கள்.

## அகழிக்குள் நடந்த இரு மரணங்கள்

உயிரோடு புதைக்கப்பட்ட போர்மனும் தொழிலாளியும்

### கவலையீனமா காரணம்?

**என்ஜினியர் கம்பெனியின் அத்தியட்சகர் மீது வழக்கு மேலதிகமான விசாரணை ஒத்திப் போடப்பட்டது**

ஏப்ரல் 30ந் திகதி சனிக்கிழமையன்று கண்டியில் உள்ள குவீன்ஸ் ஹோட்டலில் சில குழாய்களைப் பதிக்கும் வேலையை ஏறக்குறையப் பன்னிரண்டு அடி ஆழமுள்ள அகழிக்குள் நின்று செய்துகொண்டிருந்த இரு தொழிலாளர்கள் மீது மண் இடிந்துவிழ அவர்கள் அதற்குள் உயிரோடு புதைக்கப்பட்டு உயிர் துறந்த செய்தி தினகரன் மே 2ந் திகதி இதழில் வெளிவந்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அம்மரணங்கள் சம்பந்தமாக இன்றைய தினம் கண்டிப் பொலீஸ் கோட்டில் நடைபெற்ற வழக்கு விசாரணை பின்வருமாறு:

மூவர் கூறிய சாட்சியங்கள்.

**(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)**




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடமாகாண விஜயத்தையிட்டு முன்னேற்பாடுகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று ஆராய்ந்துள்ளார். துரையப்பா விளையாட்டரங்குக்கு அமைச்சர் களவிஜயம் மேற்கொண்டு, ஜனாதிபதியின் வருகைக்கான ஏற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடிய போது பிடிக்கப்பட்ட படம்.



தமிழ்நாடு வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர் சங்கங்களின் சம்மேளன தலைவர் வினோத் நாயர், சென்னைக்கான பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி டி.வெங்கடேஸ்வரனை அண்மையில் அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். கொழும்பில் எதிர்வரும் ஜூன் மாதம் 19ஆம் திகதி முதல் 23ஆம் திகதிவரை நடைபெறவுள்ள 2024 சர்வதேச கைத்தொழில் கண்காட்சியில் தமிழ்நாட்டின் பிரதிநிதிகள் குழுவினர் கலந்துகொள்வது தொடர்பாக அவர்கள் இருவரும் கலந்துரையாடினர். தமிழ்நாட்டு பிரதிநிதிகள் குழுவினரின் இலங்கை விஜயத்தால் இலங்கை மற்றும் தமிழ்நாட்டு வர்த்தக நிறுவனங்களுக்கு இடையில் ஒத்துழைப்பு மற்றும் பங்குதாரருக்கான பல்வேறு வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய சாத்தியம் உள்ளதாகவும் இச்சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

# உகண்டா தேசிய கிரிக்கெட் அணி சபாநாயகருடன் சந்திப்பு



உகண்டா தேசிய கிரிக்கெட் அணி மற்றும் அதன் அதிகாரிகள், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை அண்மையில் பாராளுமன்றத்தில் சந்தித்து கலந்துரையாடினர். இலங்கை கிரிக்கெட்டின் பயிற்சி உள்ளடங்கலாக இலங்கைக்கு சுற்றுப்பயணத்தை உகண்டா கிரிக்கெட் அணியினர் மேற்கொள்ள ஏற்பாடு செய்தமைக்கு இச்சந்திப்பின் போது சபாநாயகருக்கு அவர்கள் நன்றி தெரிவித்தனர். 2024 ஜனவரி 03ஆம் திகதி முதல் 06ஆம் திகதிவரை உகண்டாவில் நடைபெற்ற பொதுநலவாய சபாநாயகர்கள் மற்றும் தலைமை அதிகாரிகளின் 27ஆவது மாநாட்டில் சபாநாயகர் கலந்துகொண்ட போது, சபாநாயகரிடம் உகண்டா கிரிக்கெட் சங்கத்தினர் விடுத்த கோரிக்கைக்கமைய உகண்டா தேசிய அணியினருக்கு இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

யாழ். மிருசுவில் படுகொலை சம்பவம்

# மரண தண்டனை கைதிக்கு பொதுமன்னிப்பு வழங்கியது எவ்வாறு?

## விடயங்களை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு



கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்காவை ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்தமை தொடர்பிலான விடயங்களை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அறிவிப்பை அனுப்புமாறு உயர் நீதிமன்றம் நேற்று (17) உத்தரவிட்டுள்ளது.

பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் 2000ஆம் ஆண்டு ஐந்து வயதுக் குழந்தை உட்பட இடம்பெயர்ந்த எட்டு பொது மக்களை வெட்டிக் கொன்ற வழக்கில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது,

மாற்றுக்கொள்கை நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்யசோதி சரவணமுத்துவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு, நீதியரசர்கள் யசந்த கோதாகொட மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கற்பிட்டி, இப்பந்தீவு பிரதேச கடலில்

# 338 Kg பீடி இலை மூடைகள் கடற்படையினரால் மீட்பு

**கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்**

கற்பிட்டி, இப்பந்தீவு பிரதேச கடலில் மிதந்துகொண்டிருந்த 338 கிலோ பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வடமேற்கு கடற்படை கட்டளையின் கற்பிட்டி உச்சமுனை கடற்படையினரால் இப்பந்தீவு கடல் பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட போதே, கடலில் மிதந்துகொண்டிருந்த இப்பீடி இலை மூடைகள் கடந்த புதன்கிழமை (15) மீட்கப்பட்டுள்ளன.

11 உர மூடைகளில் அடைக்கப்பட்ட 338 கிலோ பீடி இலைகள் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் விநியோகிக்கும் நோக்கில் பீடி இலைகள் கொண்டு வரப்பட்டிருக்கலாமென தாம் சந்தேகிப்பதாக கடற்படையினர் குறிப்பிட்டனர்.

எனினும் கடற்படையினரின் கெடுபிடிகள் காரணமாக பீடி இலைகளை கொண்டு வந்தவர்கள் அதனை கடலிலேயே கைவிட்டு தப்பிச் சென்றிருக்கலாமெனவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட இப்பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக தமது பொறுப்பில் வைத்துள்ளதாக கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

கடந்த சில மாதங்களில் கற்பிட்டி பிரதேசத்தில் பத்தலங்குண்டு, இப்பந்தீவு, கீரிமுந்தல், மாம்புரி, தேத்தாப்பொல மற்றும் தளுவ உள்ளிட்ட பகுதிகளிலிருந்து சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு சொந்தமான கடல் மற்றும் கரையோர பகுதியில் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் இலங்கை கடற்படையினர் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கண்டி நகரில் ஒரே நேரத்தில் 100 MM மழை வீழ்ச்சி பதிவு

## ரயில் நிலையம் உட்பட நகரம் மூழ்கியது



கடும் மழையினால் கண்டி ரயில் நிலையம் உட்பட நகரின் பல பகுதிகள் நீரில் மூழ்கியமைக்கு சட்டவிரோத கட்டட நிர்மாணங்கள் மற்றும் முறையற்ற வடிகால் அமைப்பே காரணம் என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கண்டி நகரில் நேற்று முன்தினம் 100 மில்லிமீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி ஒரே நேரத்தில் பெய்துள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

கடும் மழையை தொடர்ந்து போகம்பரவுக்கு பின்புறமாகவுள்ள மலைப் பகுதியிலிருந்து பெருமளவான வெள்ளநீர் ரயில் நிலையத்தை நோக்கி பெருக்கெடுத்திருந்ததால் மக்கள் பெரும் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிள் மீது

# மரம் வீழ்ந்ததில் சரிந்து 02 பொலிஸார் படுகாயம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

பொலிஸார் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது மரமொன்று சரிந்து வீழ்ந்ததில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்துள்ளனர். தம்புள்ளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.



இவர்கள் இருவரும் மேலும் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் மூன்று மோட்டார் சைக்கிள்களில் மாத்தளையிலிருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும் போது கவரக்குளம் பிரதேசத்தில் பாரிய மரமொன்று ஒரு பொலிஸ் மோட்டார் சைக்கிள் மீது சரிந்து வீழ்ந்துள்ளது. இதனால் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்து அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 05ஆம் நாள் சனிக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1445 துல்கஃதா பிறை 09

### குறள் தரும் சிந்தனை



பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை உடைத்து

ஒரு பெண்ணின் காலைச் சுற்றிக் கொண்டு கிடைக்கும் ஒருவனின் ஆண்மையைக் காட்டிலும், மான உணர்வுள்ள ஒருத்தியின் பெண்மையே பெருமைக்குரியதாகும்.

# இன்றைய இயந்திர வாழ்வில் அதிகரிக்கும் மனஅழுத்தம்!

உலகெங்கும் மக்கள் மத்தியில் மனஅழுத்தம் தொடர்பான உபாதைகள் நாளாந்தம் அதிகரித்து வருவதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். மனஅழுத்தத்தினால் பாதிக்கப்படுபவர்கள் நிம்மதியற்ற வாழ்க்கையையே வாழ்ந்து வருவதுடன், கடுமையான மனஅழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் சிலர் தங்களது உயிரையே மாய்த்துக் கொள்ளும்படியான பரிதாப நிலைமைக்கு உள்ளாகின்றனர்.

மனஅழுத்தத்தினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை உலகநாடுகள் அனைத்திலும் அதிகரித்து வருகின்றது. இலங்கையும் அதற்கு விதிவிலக்கு அல்ல. மனஅழுத்தம் என்பது ஒரு உளப் பாதிப்பு ஆகும். ஒரு மனிதனுக்கு உடல் ரீதியில் ஏற்படுகின்ற பாதிப்புகளை வெளித்தோற்றத்தில் கண்டறிந்து கொள்ளலாம். ஆனால் உளரீதியில் ஏற்படுகின்ற பாதிப்புகளை வெளித்தோற்றத்தில் கண்டறிந்து கொள்வது மிகவும் அரிதானது.

எனவேதான் மனஅழுத்தம் போன்ற பாதிப்புக்கு உள்ளாகியோரில் அநேகம் பேர் எமது சமூகத்தில் வெளியே தெரியாதவர்களாக உலவிக் கொண்டிருக்கிறார்கள். அதேவேளை மனஅழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் பலர் மருத்துவ சிகிச்சைக்கும் செல்வதில்லை. மருத்துவர்களிடம் செல்வதற்கே அவர்கள் தயங்குகின்றனர். மனஅழுத்தத்தினால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளமை குறித்து அவர்களுக்கே தெரிவதுமில்லை.

மனஅழுத்தம் என்பது மனிதனுக்கு இயல்பான ஒன்றுதான். மனிதனுக்கு உணர்ச்சிகள் அதிகமாவதும், ஒரு சில நேரங்களில் உணர்ச்சியற்று இருப்பதும் பொதுவான ஒன்று. மனிதனுக்கு மனஅழுத்தம் என்பது பல காரணங்களால் ஏற்படும். சுற்றுப்புறத்தில் இருந்து வரலாம், நம் உடலில் இருந்தே வரலாம், நம் சிந்தனையில் இருந்தும் மனஅழுத்தம் வரலாம். மாணவர்களுக்கு பரீட்சை வேளையிலும் ஒரு மனப்பதற்றம் இருந்துகொண்டே இருக்கும். அது நீடிக்குமானால் மனஅழுத்தமாக மாறலாம்.

மனஅழுத்தத்தைக் குறைக்க வேண்டியது அவசியம். இல்லையேல் நமது வாழ்வின் முன்னேற்றத்தில் அது முட்டுக்கட்டையாகவே இருந்து கொண்டிருக்கும் என்கிறார்கள் உளவியலாளர்கள்.

முதலில் நாம் அனைவரும் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். நாம் மனஅழுத்தத்தை ஒரு சாதகமான விடயமாகப் பார்க்க வேண்டும். மனஅழுத்தம் ஏன் ஏற்படுகிறது என்ற வினாவுக்கு முதலில் விடையைக் காண வேண்டும்.

ஒரு விஷயத்தைக் குறித்து பதற்றப்படும்போதுதான் மனம் அழுத்தம் பெறுகிறது. எனவே அவ்விடயத்தை நாம் எச்சரிக்கையாகக் கருத வேண்டும். எதைக் குறித்து நாம் பயப்படுகிறோமோ, எதைக் குறித்து பதற்றப்படுகிறோமோ, அதை எப்படி சரி செய்வது, எப்படி அதில் வெற்றியடைவது என்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். முடிந்த அளவு மனஅழுத்தம் ஏற்படாதவாறு சிந்தனையை பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஏனென்றால், மனஅழுத்தத்தால் பாதிக்கப்படுபவரின் உடலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த மாற்றங்கள் பாதிப்பாகவும் மாற்றமடையக் கூடம் என்கிறார்கள் உளவியல் மருத்துவர்கள்.

ஒருவர் மனஅழுத்தத்தோடு இருந்தால் அவரது சுவாச அமைப்பு உடனடியாக பாதிப்படையும். மூச்சு விடுவதற்கு சிரமப்படுவார். ஒக்ஸிஜன் பற்றாக்குறையால், இரத்த ஓட்டம் சீராக இருக்காது.

மனஅழுத்தம், நோய் எதிர்ப்பு சக்தி அமைப்பை அழித்துவிடும். மனஅழுத்தம் ஏற்படும்போது ஹோமோன் ஒன்று சுரப்பதால் அது எதிர்ப்பு சக்திகளை அடக்கி விடுகிறது. இதனால் எமது உடல் பக்டீரியா மற்றும் வைரஸுடன் போராட முடியாமல் பலவீனமாகிப் போய்விடும்.

மனஅழுத்தத்தால் தசை மற்றும் எலும்புப் பகுதிகளும் பாதிப்படையும். இயல்பாகவே உடலின் சதைப் பகுதி, உடலின் உட்புற பாகங்களை பாதுகாக்கும் வண்ணம் அமைந்துள்ளது. ஆனால், மனஅழுத்தம் ஏற்பட்டால் தசைப் பகுதிகள் வலுவிழக்கும். தோள் பட்டை, கழுத்து, முதுகு பகுதிகளில் வலி ஏற்படும். தலைவலி அதிகமாக இருக்கும்.

மனஅழுத்தத்தினால் இரத்த ஓட்டம் அதிகமாகும். மனம் திரும்ப பழையநிலைக்கு வந்துவிட்டால், சரியாகிவிடும். ஆனால் தொடர்ந்து ஒரு நபர் ஒரே விஷயத்தாலோ அல்லது ஒரே அளவில் மனஅழுத்தத்தில் இருந்தால் பாரதூரமான பாதிப்புகள் ஏற்படும் ஆபத்து உள்ளது. மனஅழுத்தம் ஏற்படும்போது இரைப்பை மற்றும் குடலில் பாதிப்புகள் ஏற்படும். சரியான சமிபாடு இருக்காது. மன அழுத்தத்தின் போது உணவுப் பழக்கம் மாறும். அதை இரைப்பை ஏற்காது. இதனால் பிரச்சினைகள் ஏற்படும்.

உலகெங்கும் மக்கள் மத்தியில் மனஅழுத்தப் பாதிப்புகள் அதிகரித்து வருவதனால் இவ்விடயத்தில் விழிப்புணர்வு அவசியமாகின்றது. மனஅழுத்தம் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் விழிப்புணர்வுகள் சமூகத்தில் முன்னெடுக்கப்படுவது முக்கியம்.

பிரச்சினைகள் இல்லாத மனிதர்கள் உலகில் இல்லை. அனைவருக்கும் ஏதோவொரு பிரச்சினைகள் இருந்துகொண்டே இருக்கும். அப்பிரச்சினைகள் மனஅழுத்தத்தை ஏற்படுத்தாதவாறு ஒவ்வொருவரும் விழிப்புணர்வுடன் இருப்பது அவசியம்.

editor.tkn@lakehouse.lk

# கொவிட் தடுப்பூசி மருந்து பக்கவிளைவுகள்; மக்கள் இனிமேல் அஞ்சத் தேவையில்லை!

கொவிஷீல்ட் தடுப்பூசியின் அரிதான பக்கவிளைவுகள் கண்டறியப்பட்டது பரபரப்பைக் கிளப்பிய நிலையில், இப்போது கொவாக்சின் தடுப்பூசி எடுத்துக் கொண்டவர்களுக்கும் சில பக்கவிளைவுகள் ஏற்படுவது கண்டறியப்பட்டுள்ளது. உலகில் கடந்த 2019 இறுதியில் பரவத் தொடங்கிய கொரோனா அதன் பிறகு உலகை மொத்தமாகப் புரட்டிப் போட்டுவிட்டது. அதில் இருந்து மீண்டு வரவே நமக்கு சில ஆண்டுகள் வரை ஆகிவிட்டது.

அந்தக் காலகட்டத்தில் கொரோனா தடுப்பூசிதான் பலரது உயிர்களையும் காப்பாற்றியது. இதற்கிடையே கொரோனா தடுப்பூசி மருந்து ஏற்படுத்தும் சில அரிய பக்கவிளைவுகள் குறித்த தகவல்கள் இப்போது வெளியாகி வருகிறது. ஏற்கனவே கொவிஷீல்ட் சில அரிய பக்கவிளைவுகளை ஏற்படுத்துவதை அந்த நிறுவனமே ஒப்புக் கொண்டுள்ளது.

இதற்கிடையே பாரத் பயோடெக்கின் கொவாக்சின் எடுத்துக் கொண்டவர்களிடையேயும் சில பக்கவிளைவுகள் ஏற்பட்டுள்ளதை சமீபத்திய ஆய்வுகள் காட்டுகின்றன. SpringerLink என்ற இதழில் இது தொடர்பான ஆய்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில் தடுப்பூசி எடுத்துக் கொண்டவர்களில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதியினருக்கு AESI



## பாதிப்புக் காலம் கடந்து விட்டது என்பது மருத்துவர்களின் கருத்து



எனப்படும் சில பாதகமான நிகழ்வுகள் ஏற்பட்டுள்ளதை ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் சங்க சுப்ரா சக்ரபர்தி மற்றும் அவரது குழு நடத்திய ஆய்வில் இது கண்டறியப்பட்டுள்ளது. கொவாக்சின் போட்டவர்களில் குறிப்பிட்ட மக்களுக்கு இந்த பாதிப்பு எளிதாக ஏற்படுகிறதாம். குறிப்பாகப் பருவ வயதில் இருக்கும் பெண்கள் மற்றும் ஒவ்வாமை இருப்போருக்கு இதன் பாதிப்பு அதிகம் இருக்கிறதாம்.

635 இளம் பருவத்தினர் மற்றும் 291 வயதானவர்கள் உட்பட 1,024 பேருக்கு இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. சுமார் ஓராண்டு அவர்களை ஆய்வு செய்து உடலில் ஏற்படும் பாதிப்புகளைக் குறித்துக் கொண்டுள்ளனர். அப்போதுதான் தடுப்பூசி போட்டவர்களுக்கு சுவாசக்குழாய் நோய்த்தொற்றுகள் பரவலாக இருந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. பதின்ம வயதில் இருப்போருக்குத் தோல் கோளாறுகள் (10.5%), இதர பாதிப்புகள் (10.2%) நரம்பு மண்டல கோளாறுகள் (4.7%) ஏற்பட்டுள்ளதையும் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். பெரியவர்களிடையே பார்க்கும் போது பொதுவான பக்கவிளைவுகள் (8.9%) தசைக்கூட்டு கோளாறுகள் (5.8%) மற்றும் நரம்பு மண்டல கோளாறுகள் (5.5%) அடிக்கடி ஏற்படுவது உறுதியாகி இருக்கிறது. பெண்களிடையே தான் பாதிப்புகள் அதிகம் இருந்துள்ளது. குறிப்பாக மாதவிடாய் ஏற்படுவதில் 4.6% பேருக்கு மாற்றம் இருந்துள்ளது. வெகு சிலருக்கு (2.7%) கண்களில் பாதிப்பு ஏற்பட்ட நிலையில், ஹைப்போ தைரோய்டிசம் (0.6%) உள்ளிட்ட பாதிப்புகளும் கண்டறியப்பட்டுள்ளன.

இளம் பருவத்தினர், பெண்கள் மற்றும் ஏற்கனவே ஒவ்வாமை இருப்போருக்குத்தான் இந்த பாதிப்பு அதிகம் ஏற்படுவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே இணை நோய்ப் பாதிப்பு கொண்டவர்களிடையேயும் பாதிப்பு அதிகம் இருந்துள்ளது. அதேநேரம் இவை மிகத் தீவிர பக்கவிளைவுகளை ஏற்படுத்தியதா என்பது குறித்த தகவல்கள் இதில் இல்லை.

பொதுவாகவே வெகு சிலருக்கு மட்டுமே தடுப்புமருந்துகள் பக்கவிளைவுகளை ஏற்படுத்தும். அதுவும் உயிரிழப்பு போன்றவை தடுப்பு மருந்தினால் ஏற்படுவது மிக மிக அரிது. உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் தடுப்பூசி போடவில்லை என்றால் தான் உயிரிழப்புகள் ஏற்படும் ஆபத்து அதிகமாகும்.

மேலும், தடுப்பூசி பக்கவிளைவுகள் என்பவை பொதுவாகத் தடுப்பூசி போட்டு சில வாரங்களில் ஏற்பட்டுவிடும். இத்தனை காலம் ஆகிவிட்டதால் இனி யாருக்கும் புதிதாகப் பக்க விளைவுகள் ஏற்படாது என்பதால் மக்கள் அஞ்சத் தேவையில்லை என்கிறார்கள் மருத்துவர்கள்.

# அட்டாளைச்சேனையில் களைகட்டிய சர்வதேச தாதியர் தின விழா

அக்கரைப்பற்று INPS Campus தாதியர் கல்லூரி ஏற்பாடு செய்த, சர்வதேச தாதியர் தின விழா நிகழ்வுகள் அட்டாளைச்சேனை லொயிட்ஸ் மண்டபத்தில் விமரிசையாக நடைபெற்றன.

அக்கரைப்பற்று INPS Campus தாதியர் கல்லூரியின் தலைமை நிர்வாகி எம். அலி சிறாஜ் மற்றும் பணிப்பாளர் ஐ.ரி. ஹானின் ஆகியோரின் இணை ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வுகளில் அதிகமானோர் கலந்து சிறப்பித்தனர்.

தாதியர் சேவையின் ஸ்தாபகர் புளோரன்ஸ் நைட்டிங்கேளின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 12ம் திகதி சர்வதேச தாதியர் தினம் கொண்டாடப்படுகின்றது. 'நமது தாதியர்கள் நமது எதிர்காலம், தாதியர் சேவையின் பொருளாதார சக்தி' எனும் கருப் பொருளில் இவ்வருடம் சர்வதேச தாதியர் தினம் கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

விழா நிகழ்வுகளில், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.எம்.றிபாஸ்தீன், ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதி பிரதான அமைப்பாளரும், அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் உறுப்பினருமான யூ.கே.ஆதம்லெவ்வை (லொயிட்ஸ்) ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

அம்பாறை மாவட்டச் செயலக உளவளத்துணை இணைப்பாளர் மனூஸ் அபூபக்கர் தாதியர் தின பிரதான உரையை நிகழ்த்தினார்.

மனிதனாகப் பிறந்த நாங்கள் தாதியர்களின் சேவையை ஏதோ வகையில் பிறப்புக்கும் இறப்புக்குமிடையில் பெற்றுக் கொள்கின்றோம். ஆனால், அவர்களது சேவையின் மகத்துவம், அர்ப்பணிப்பு, தியாகம் என்பனவற்றை நாங்கள் உணர்ந்து கொள்வதற்கு தவறிவிடுகின்றோம். இவ்வாறானவர்களுக்கு சர்வதேச தாதியர் தினம் சிறந்ததொரு எடுத்துக் காட்டாகும். தாதியர்களின் பணி, அன்பு, அரவணைப்பு என்பனவற்றை நாங்கள் நோயாளியாக வைத்தியசாலைக்குச் செல்லும் போதெல்லாம் தெளிவாகக் கண்டு கொள்கின்றோம். அவர்கள் சேவையின் அவசியம் கருதி ஊண், உறக்கமின்றி பணியாற்றுவதையும் நன்கு தெரிந்து கொண்டுள்ளோம். சாதி, மத, பிரதேச, மொழி வேறுபாடுகளின்றி ஏனையவர்களுக்கு மனம் கோணாது உதவும் தொழிலாகவே தாதியர் சேவையை நாங்கள் கண்டு கொள்ளலாம்.

இவ்வாறானவர்களுக்கு சர்வதேச ரீதியில் விழா எடுப்பதும், அவர்களது உணர்வுபூர்வமான பணிகளை நன்றியுடன் நினைவு கூர்வதும். அவர்களை பாராட்டி உற்சாகப்படுத்துவதும், அவர்களுக்கு பரிசு வழங்கி கௌரவிப்பதும் மிகவும் பொருத்தமானதாகும். அந்தவகையில் இவ்விழாவினை மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்த ஏற்பாட்டாளர்கள் நன்றி, பாராட்டுக்குரியவர்கள் என்று நிகழ்வில் உரை நிகழ்த்திய அதிதிகள் குறிப்பிட்டனர்.

தாதிய மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டதுடன், கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன. பிரதேச முக்கியஸ்த்தர்கள், விரிவுரையாளர்கள், தாதியர்கள், தாதிய மாணவர்கள், பெற்றார்கள் என அதிகமானோர் நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்தனர்.

முகம்மட் றிஸான்...
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)






# சீதாதேவிக்கும் ஆலயம் அமைக்க போவதாக அமித்ஷா உறுதி

சீதை பிறந்த சீதாமர்ஹி நகரில் பிரமாண்ட கோயில் கட்டுவோம்' என இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா வாக்குறுதி அளித்துள்ளார்.

பீஹார் மாநிலம் சீதாமரி மாவட்டத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் அமித்ஷா பேசியதாவது:

"லாலு பிரசாத் யாதவ் தன் மகனை முதல்வராக்க வேண்டும் என்பதற்காக, காங்கிரஸ் கட்சியிடம் சரணாகதி அடைந்துள்ளார். மக்களே, நீங்கள் சொல்லுங்கள், இராமர் கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டுமா இல்லையா? இராமர் கோயில் கட்ட, காங்கிரஸ் மற்றும் ஆர்.ஜே.டி உள்ளிட்ட கட்சிகள் பல ஆண்டுகளாக தடையை உருவாக்கின. ஆனால் 2வது முறையாக, பிரதமர் ஆனதும் மோடி அயோத்தியில் இராமர் கோயில் கட்டினார்.

வாக்கு வங்கியைக் கண்டு பா.ஜ., பயப்படுவதில்லை. இரண்டு தடுப்பூசிகளை வழங்கி, கொரோனா காலத்தில் மக்களின் உயிரை பிரதமர் மோடி காப்பாற்றினார். அந்த நேரத்தில், தேஜஸ்வி யாதவ் மற்றும் ராகுல் ஆகியோர்



மோடியின் தடுப்பூசியை போட வேண்டாம் என கூறினர். ஆனால் பிரதமர் மோடியின் மீது மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். ராகுல் சொல்வதை மக்கள் கேட்க வில்லை. எல்லோரும் தடுப்பூசி போட்டார்கள். காங்கிரஸ் ஆட்சியின் போது பீஹார் மற்றும் ஜார்கண்ட் மாநிலம் முழுவதும் நக்சலைட் தாக்குதல்கள் அதிகம் நடந்தது.

பா.ஜ., ஆட்சிக்கு வந்த பிறகு, பீஹார், ஜார்கண்ட், மத்தியப் பிரதேசம், தெலுங்கானா, ஒடிசா, ஆந்திரா, மஹாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் நக்சலைட் தாக்குதல்கள் முடிவுக்கு வந்தன. சத்தீஸ்கரில் கொஞ்சம் மீதம் உள்ளது. ஆனால் இன்னும் 2 ஆண்டுகளில் சத்தீஸ்கரில் இருந்தும் நக்சலைட் தாக்குதல்களை ஒழிப்போம்.

இது பிரதமர் மோடியின் உத்தரவாதம். இது சீதாவின் மண், இங்கு பசுவதையை நாங்கள் ஏற்க மாட்டோம். பசுவதை மற்றும் பசுக் கடத்தலை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். பா.ஜ.க ஆட்சியில் பசுவதை செய்வோரை தலைகீழாக தொங்கவிடுவோம்.

சீதை பிறந்த சீதாமர்ஹி நகரில் சீதைக்கு பிரம்மாண்ட கோயில் கட்டுவோம். உலகத்தின் அனைவரையும் ஈர்க்கும் ஒரு பிரமாண்டமான கோயிலாக அது இருக்கும்".

இவ்வாறு அமித்ஷா பேசினார்.

அயோத்தியில் ராமர் கோயிலை தொடர்ந்து, சீதா தேவி கோயில் கட்டுவோம் என அமித் ஷா பேசி இருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

# பலஸ்தீன தேச உறுப்புரிமை ஐ.நாவில் அங்கீகாரம்: அமெரிக்கா எதிர்ப்பு, அவுஸ்திரேலியா ஆதரவு ஏன்?



ஐ.நா. சபை பலஸ்தீனத்தை 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ஆம் நாள் முதல் 'பார்வையாளர் நாடு' (observer state) என்னும் நிலைக்கு அறிவித்தது. ஐரோப்பிய ஒன்றியம் பலஸ்தீனத்தை முழு இறையாண்மை கொண்ட நாடாக அங்கீகரிக்காவிடினும், அது பலஸ்தீனத்துடன் தூதரக உறவைப் பேணி வருகிறது.

பலஸ்தீனம் காசா பகுதியில் போர் தீவிரமான நிலையில், இஸ்ரேலுடன் பல தசாப்தங்களாக நிலவும் மோதலுக்கு இரு நாடுகளின் தீர்வுக்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில், பலஸ்தீனம் அதன் தற்போதைய உறுப்பினர் அல்லாத கண்காணிப்பு நாடாக இருந்து முழு ஐ.நா. உறுப்பினராக உயர்த்தப்பட வேண்டும் என்று அவுஸ்திரேலியா வலியுறுத்துகிறது.

பலஸ்தீனத்தின் ஐக்கிய நாடுகளின் உறுப்புரிமைக்கு அவுஸ்திரேலியா விடுத்த கோரிக்கை வாக்கெடுப்பு அமோக வெற்றி பெற்றுள்ளது. இதேபோன்ற தீர்மானத்தை முன்பு அமெரிக்கா வீட்டோ செய்ததையடுத்து, இந்த விவகாரம் மறுபரிசீலனை செய்யப்பட்டது.

பலஸ்தீனத்தை முழு அங்கத்துவ நாடாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் ஐ.நா.வில் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது, 193 அங்கத்துவ நாடுகள் கொண்ட ஐ.நா. சபையில் 143 நாடுகள் அதற்கு ஆதரவாக வாக்களித்தன.

அமெரிக்கா, இஸ்ரேல் உட்பட 9 நாடுகள் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தன. இந்தத் தீர்மானம் முன்னர் ஐ.நா பாதுகாப்புச் சபையில் வாக்கெடுப்புக்கு வந்தபோது, அமெரிக்கா தனது 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தி அதைத் தடுத்திருந்தது.

இது பாலஸ்தீனியர்களுக்கு முழு ஐ.நா. அங்கத்துவத்தை வழங்கவில்லை. ஆனால் அவர்கள் சேர தகுதியானவர்கள் என்று அங்கீகரிக்கிறது.

தற்போது கனடா உட்பட 25 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. முன்னைய காலங்களில் இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானங்கள் ஐ.நா.வில் வந்தபோது, அவற்றுக்கெதிராக கனடா வாக்களித்திருந்தது. ஆனால் இந்த முறைதான் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் விலகி நின்றுள்ளது.

தற்போதைய நிலைப்பாடு குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த கேனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ, 'கனடா இப்பிரச்சினைக்குத் தீர்வாக இரு நாடுகள் என்ற கொள்கை நிலைப்பாட்டில் உள்ளது' எனத் தெரிவித்துள்ளார்.



ஆனால் அமெரிக்காவோ இரு நாட்டுக் கொள்கையையே எதிர்க்கின்றது. தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் பாலஸ்தீனத்துக்குச் சாதகமாக இருந்தாலும், பாலஸ்தீனம் இத்தீர்மானம் மூலம் ஐ.நா.வில் முழு உறுப்பினராகிவிட முடியாது. ஆனால் அதன் கோரிக்கைக்கு ஒரு அங்கீகாரம் கிடைத்துள்ளது.



ஐக்கிய நாடுகள் சபையில் பாலஸ்தீனத்தின் முழு அங்கத்துவத்தை ஆதரிக்கும் ஒரு பெரும் பெரும்பான்மையுடன் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்த பிற நாடுகள் செக்கியா, ஹங்கேரி, அர்ஜென்டினா, மைக்ரோனேஷியா, நவ்ரு, பலாவ், பப்புவா நியூ கினியா ஆகியனவாகும்.

இந்தியா ஆதரவாக வாக்களித்ததுடன், பலஸ்தீனிய உறுப்புரிமையை ஆள வேண்டிய ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் விஷயத்தை சாதகமாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனக் கோரியது.

தற்போது பலஸ்தீன அரசு ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெறத் தகுதி பெற்றுள்ளது.

இஸ்ரேல், பாலஸ்தீன மோதலில் இரு நாடுகளின் தீர்வுக்கான தனது நிலைப்பாட்டை இந்தியா எப்போதும் வலியுறுத்தி வருகிறது. அதேநேரத்தில், ஹமாஸ் நடத்திய ஒக்டோபர் 7 தாக்குதல் உட்பட எந்தவொரு பயங்கரவாதத் தாக்குதலையும் புதுடெல்லி கண்டித்துள்ளது.

பலஸ்தீனியர்களுக்கு தாயகம் வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ள இந்தியா, இறையாண்மை, சுதந்திரம் மற்றும் சாத்தியமான பலஸ்தீனத்தை பாதுகாப்பான அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் நிறுவுவது, இஸ்ரேலுடன் சமாதானமாக வாழ்வது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட இரு நாட்டு தீர்வை ஆதரித்துள்ளதாக இந்தியவெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஐ.நாவில் இந்த வாக்களிப்பதற்கு முன் பலஸ்தீனிய தூதர் ரியாத் மன்சூ, போரினால் பாதிக்கப்பட்ட காசாவில் பலஸ்தீனியர்களின் அவல நிலை பற்றி விரிவாகக் கூறினார்.

ரஃபாவில் உள்ள 1.4 மில்லியன் பலஸ்தீனியர்கள் இன்று பிழைப்பார்களா என்று ஆச்சரியப்படுகிறார்கள் என்று அவர் கூறினார். தெற்கு காசாவில் மக்கள் அடர்த்தியான நகரத்தின் மீது நடத்தப்பட்ட ஒரு பெரிய தாக்குதலைப் பற்றி தகவல்கள் வெளிவந்துள்ளன என அவர் கூறினார்.

பலஸ்தீனிய அரசை ஒரு தலைப்பட்சமாக அவுஸ்திரேலியா அங்கீகரிப்பதை இஸ்ரேல் கண்டனம் செய்துள்ளது. ஆனால் அவுஸ்திரேலியா வெளியுறவு அமைச்சர் பென்னி வோங், அங்கீகாரம் மற்றும் இரு நாடுகளின் தீர்வு ஆகியவற்றுடன் முன்னேறுவது உண்மையில் ஹமாஸைக் கட்டுப்படுத்தும் என்றார். ஹமாஸ் மோதலை விரும்புகிறது, இத் தீர்மானம் நீண்டகால அமைதியைப் பற்றியது. ஹமாஸ் இஸ்ரேலை அழிக்க விரும்புகிறது, இது இஸ்ரேலுக்கான நீண்டகால பாதுகாப்பு பற்றியது என்றும் அவர் கூறினார்.

காசாவின் கடைசி புகலிடமான ரஃபாவிற்குள் இஸ்ரேல் படையெடுப்பு சர்வதேச கண்டனத்தைப் பெற்றுள்ள வேளையில், அங்கு ஒரு மில்லியனுக்கும் அதிகமான பலஸ்தீனியர்கள் தஞ்சம் அடைந்துள்ளனர்.

அவுஸ்திரேலிய பிரதம மந்திரி அந்தோனி அல்பானீஸ் மற்றும் வெளியுறவு மந்திரி பென்னி வோங் மனிதாபிமான நிலைமை குறித்து கவலைகளை வெளிப்படுத்திய அதேவேளையில், ரஃபா மீதான முழு அளவிலான ஆக்கிரமிப்பிற்கு இஸ்ரேருக்கு அழுத்தம் கொடுத்து உள்ளனர். இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் ஏற்றுமதி செய்வதை நிறுத்துவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் அச்சுறுத்தியுள்ளார்.

எஞ்சியிருக்கும் பணயக்கைதிகளை விடுவிக்கவும், காஸாவுக்குள் தடையின்றி உதவிகளை வழங்கவும் மனிதாபிமான போர் நிறுத்தத்திற்கு அவுஸ்திரேலியா அழைப்பு விடுத்துள்ளது.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# கிழக்குக்கு விஜயம் செய்த இந்தியாவின் குருமகா சந்நிதான ஆதீன பீடாதிபதி



இந்தியாவின் ஸ்ரீமத் பரசமய கோளறி நாதர் ஆதீன 39 ஆவது குரு மகா சந்நிதானபீடத் தலைவர் புத்தாத்மானந்த சரஸ்வதி சுவாமிகள் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

அவர் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் வட மாகாணம் பூராக 9 நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

முதல் நாள் விஜயம் அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்றது.

அச்சமயம், முதலில் கல்முனை தரவைப் பிள்ளையார் ஆலயம்,வீரமுனை சிந்தாயாத்திரை பிள்ளையார் ஆலயம், வளத்தாப்பிட்டி பளவெளி சிவன் ஆலயம், மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயம், திராய்க்கேணி மாரியம்மன் கோவில், மாணிக்கமடு பிள்ளையார் ஆலயம், ஆலங்குளம் சிவன் ஆலயம், செங்காமம் பிள்ளையார் ஆலயம் போன்ற பின்தங்கிய எல்லைப்புற பாதிக்கப்பட்ட ஆலயங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமை பற்றி ஆராய்ந்தார்.



அவருடன் லண்டன் கற்பகப் பிள்ளையார் ஆலய சபையின் இலங்கைக்கான இணைப்பாளரும் இலங்கை அகிலன் பவுண்டேசனின் உதவிப்பணிப்பாளருமான கலாநிதி வி.ஆர். மகேந்திரன், அம்பாறை மாவட்ட சமய ஆர்வலர்களான முன்னாள் பிரதேசசபைத் தவிசாளர் கே.ஜெயசிறில், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, சமூக செயற்பாட்டாளர் தா. பிரதீபன் ஆகியோரும் சுவாமிகளின் இந்திய பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.

குறித்த ஆலயங்களின் வரலாறு தேவைகள் தொடர்பாக அந்தந்த ஆலய பரிபாலன சபையினருடன் கலந்துரையாடப்பட்டது.

**காரைதீவு குறூப் நிருபர்...**

# பா.ஜ.க ஆட்சியில் இந்தியாவின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்ததா?



இந்தியாவில் பிரதமர் நரேந்திர மோடி ஆட்சிக்கு வந்த முதல் 10 ஆண்டுகளில், பொருளாதார வளர்ச்சியின் காலகட்டத்திற்கு அடித்தளம் அமைக்க முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார் என்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள்.

மோடியும் அவரது அரசும் அதிகாரத்திற்கு வந்தபோது இந்தியப் பொருளாதாரம் வீழ்ச்சிப்பாதையில் இருந்தது. வளர்ச்சி மெதுவாக இருந்தது. முதலீட்டாளர் நம்பிக்கை குறைவாக இருந்தது. இந்திய பில்லியனர்கள் பலர் திவாலாகி, நாட்டின் வங்கிகள் மீது பெருமளவில் வராக் கடன்களின் சுமையை சுமத்தினார்கள். இதன் காரணமாக வங்கிகளின் கடன் கொடுக்கும் திறன் பலவீனமானது.

இப்போது, 10 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவின் வளர்ச்சி மற்றைய பெரிய பொருளாதாரங்களை விட அதிகமாக உள்ளது. அதன் வங்கிகள் வலுவாக உள்ளன. கொவிட் பெருந்தொற்றைச் சமாளிக்கவேண்டி இருந்தும்கூட அரசின் நிதி நிலைமை நிலையாக உள்ளது. கடந்த ஆண்டு இந்தியா பிரிட்டனை முந்தி ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக மாறியது. மோர்கன் ஸ்டான்லி ஆய்வாளர்களின் கூற்றுப்படி, 2027ஆம் ஆண்டில் ஜப்பான் மற்றும் ஜெர்மனியை முந்தி இந்தியா மூன்றாவது இடத்தை அடையும் பாதையில் உள்ளது.

சந்தேகத்திற்கு இடமின்றி நாட்டில் நம்பிக்கைபூர்வமான சூழல் நிலவுகிறது. இந்தியா G20 மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியது. சந்திரனின் தென்துருவத்திற்கு அருகே ரொக்கெட்டை அனுப்பிய முதல் நாடாக இந்தியா ஆனது. மேலும் பல பெரிய நிறுவனங்களை (யூனிகார்ன்) உருவாக்கியது. ஏறுமுகமாக இருக்கும் பங்குச் சந்தைகள் நடுத்தர வர்க்கத்தின் செல்வத்தின் மீது ஆக்கபூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

இந்தியாவிற்கான ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் (பா.ஜ.க) பொருளாதார தொலைநோக்கு பார்வையான 'மோதினாமிக்ஸ்' வேலை செய்வதாகத் தோன்றுகிறது. ஆனால் ஆழமாகப் பார்த்தால், நிலைமை மிகவும் சிக்கலாக உள்ளது. நாட்டின் 140 கோடி மக்கள்தொகையில் பெரும் பகுதியினர் வாழ்வாதாரத்தின் விளிம்பில் வாழும் நிலையில் மிக சிறந்த காலகட்டம் இன்னும் வரவில்லை என்றே தோன்றுகிறது.



அப்படியானால் மோதினாமிக்ஸில் வெற்றியாளர்கள் மற்றும் தோற்றவர்கள் யார் யார்? டிஜிட்டல் மேலாண்மைக்கு மோடி அளித்த முக்கியத்துவம் நாட்டின் பல ஏழை மக்களின் வாழ்க்கையை மாற்றத் தொடங்கியுள்ளது.

இன்று நாட்டின் தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் இந்தியர்கள் தங்கள் தொலைபேசிகளில் QR குறியீட்டைப் பயன்படுத்தி, ஒரு பக்கெட் பாணுக்குக் கூட வெறும் 20 ரூபாய் செலுத்தி ரொக்கப்பணமில்லாமல் பல தினசரி பொருட்களை வாங்க முடிகிறது.

இந்த டிஜிட்டல் புரட்சியின் அடிப்படையானது மூன்று அடுக்கு நிர்வாக அமைப்பு ஆகும். உலகளாவிய அடையாள அட்டைகள், ஒரு பட்டனை அழுத்துவதன் மூலம் பணப்பரிமாற்றங்களை செயல்படுத்தும் கட்டணம் செலுத்தும் கட்டமைப்பு மற்றும் வருமான வரி தாக்கல் போன்ற பல முக்கியமான அணுகலை தனிநபர்களுக்கு அளிக்கும் தரவுக் களஞ்சியம் ஆகியவை இதில் அடங்கும்.

இந்த 'டிஜிட்டல் அடுக்குகளுடன்' கோடிக்கணக்கான வங்கிக் கணக்குகளை இணைப்பது நிர்வாகத் துறை தலையீடு மற்றும் ஊழலைக் குறைத்துள்ளது.

2021 மார்ச் மாதத்திற்குள், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.1% இற்கு சமமான சேமிப்புக்கு டிஜிட்டல் நிர்வாகம் வழிவகுத்தது. அதிக பற்றாக்குறை இல்லாமல், சமூக மானியங்கள், நிதி உதவிகள் மற்றும் உள்கட்டமைப்பு உருவாக்கம் ஆகியவற்றில் செலவழிக்க இது அரசுக்கு வழியை ஏற்படுத்தியது. இந்தியாவில் எங்கு பார்த்தாலும், கிரேன்கள் மற்றும் ஜே.சி.பி இயந்திரங்கள் வேலை செய்வதைக் காண முடியும். அது சிதைந்து வரும் பொது உள்கட்டமைப்பிற்கு ஒரு பளபளப்பான தோற்றத்தை அளிக்கிறது.

இந்தியா குறிப்பிடத்தக்க மாற்றங்களை அடைந்து வருகிறது என்பதில் சந்தேகமில்லை.

புதிய வீதிகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள் மற்றும் மெட்ரோ ரயில்களை உருவாக்குவது மோடியின் பொருளாதாரக் கொள்கையின் மையமாக உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் உள்கட்டமைப்புச் செலவினங்களுக்காக (மூலதனச் செலவு) ஆண்டுதோறும் 10,000 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை செலவழிக்கப்பட்டுள்ளது.

2014 மற்றும் 2024க்கு இடையில் கிட்டத்தட்ட 54,000 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகள் உருவாக்கப்பட்டன. இது முந்தைய 10 ஆண்டுகளில் அமைக்கப்பட்ட வீதிகளின் நீளத்தை விட இருமடங்காகும். பல தசாப்தங்களாக இந்தியாவின் பொருளாதாரத்திற்கு ஒரு பெரிய பிரச்சனையாக இருந்த நிர்வாக வர்க்கத்தின் தலையீட்டையும் அரசு கணிசமாக குறைத்துள்ளது.

சமீபத்தில் இந்திய கோடீஸ்வரர் முகேஷ் அம்பானியின் மகனின் திருமணத்திற்கு முந்திய மூன்று நாள் கொண்டாட்டம், நாட்டின் புதிய சகாப்தத்தைப் பற்றிய ஒரு காட்சியைக் கொடுத்தது. மார்க் ஸக்கர்பெர்க், பில் கேட்ஸ் மற்றும் இவாங்கா ட்ரம்ப் ஆகியோர் கலந்து இதில் கொண்டனர். உலகளவில் பிரபலமான பாடகியான ரிஹானா பொலிவுட்டின் மிகப்பெரிய பிரபலங்களுடன் மேடையில் நடனமாடி இசை நிகழ்ச்சியை நடத்தினார். அதே நேரத்தில் அம்பானி இல்லப் பெண்கள், ஒருகாலத்தில் முகலாய பேரரசின் சேகரிப்பில் இருந்த வைரங்கள் மற்றும் நகைகளை அணிந்திருந்திருந்தனர்

இவையெல்லாம் வெளிப்படுத்துவது என்ன? இந்தியாவின் பொருளாதாரம் வளர்ச்சி பெற்றுள்ளதென்பதுதான் இதன் அர்த்தமாகும்.

## வட்டி வீத அதிகரிப்பு...

ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது. தற்போதைய பொருளாதார நிலைக்கேற்ப வட்டி வீதத்தை எவ்வளவு அதிகரிக்க முடியுமென்பதை கண்டறிந்து அதற்கேற்ப செயற்படுமாறு அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

60 வயதுக்கு மேற்பட்டவர்களது கணக்குகள் சுமார் 1.1 மில்லியன் உள்ளன. அவற்றை முறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

குறிப்பாக, ஒரே நபர் பல வங்கிக் கணக்குகளை பராமரித்து வருவதையும் அந்தக் கணக்குகளில் பிற தரப்பினரின் பணத்தை வைப்பிலிடுவதை குறித்து மேற்கொள்ளப்பட வேண்டிய தேடுதல்களின் அவசியமும் இங்கு வெளிப்படுத்தப்பட்டன.

இது தொடர்பான அறிக்கை அடுத்த வாரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதேவேளை சமுர்த்தி, கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் அரச நிறைவேற்று உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பான பல யோசனைகளும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

நிதி அமைச்சின் பிரதி செயலாளர்கள், தேசிய வரவு செலவு திணைக்களம், அபிவிருத்தி நிதித் திணைக்களம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம், பொது நிறுவனங்கள் திணைக்களம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் உயரதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## இலங்கையின் செயல் திறனுக்கு...

ன் இரண்டாவது மதிப்பாய்வை முடிப்பதற்காக நாணய நிதியத்தின் அலுவலர்களும் இலங்கை அதிகாரிகளும் பொருளாதாரக் கொள்கைகள் குறித்த பணியாளர் அளவிலான உடன்பாட்டை எட்டியுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் கீழ் 2024 ஆண்டுக்கான IV ஆலோசனை, மதிப்பாய்வு IMF நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்டு, IMF நிறைவேற்று குழுவின் நடவடிக்கை முடிவடைந்தவுடன், இலங்கைக்கு சுமார் 337 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைக்கும் என்று அவர் மேலும் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவின் மறுஆய்வை முடிப்பதற்கு இரண்டு விடயங்களில் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விடயம் பலதரப்பு பங்காளிகள், நிதியுதவி பங்களிப்புகள் மற்றும் நிதி மறுசீரமைப்புடன் போதுமான முன்னேற்றத்தை மதிப்பிடும் கடன் மறுசீரமைப்பு தொடர்பான அடுத்த கட்டம் வெளி தனியார் கடனாளர்களுடன் பேச்சுவார்த்தைகளை முடிப்பதாகும் மற்றும் இலங்கையின் உத்தியோக பூர்வ கடனாளிகளுடன் கொள்கை அடிப்படையில் ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதாகும். உள்நாட்டு கடன் நடவடிக்கைகள் பெரும்பாலும் முடிவுக்கு வந்துள்ளன. கடனீட்டுப் பத்திரத்தின் உரிமையாளர் தொடர்பாக நடவடிக்கைகள் பெரும்பாலும் முடிவுக்கு வந்துள்ளன.

வெளிநாட்டுப் கடனீட்டுப் பத்திரத்தின் உரிமையாளர்களுடனான ஆரம்பக்கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகள் ஒப்பந்தம் எட்டப்படாமல் ஏப்ரல் நடுப்பகுதியில் முடிவடைந்தன. மேலும் கொள்கைகள் மற்றும் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் தரப்பில் உடன்பாட்டை எட்டுவதற்கான நோக்கத்துடன் கலந்துரையாடல்கள் தொடர்கின்றன.

கொள்கை ரீதியில் இந்த ஒப்பந்தங்கள் இன்னும் இறுதி செய்யப்பட வேண்டும்" என்று அவர் மேலும் தெரிவித்தார்

## பட்டதாரி ஆசிரியர்களுக்கு...

இது தொடர்பில் இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்ட பட்டதாரி ஆசிரியர்களால் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இது தொடர்பாக அமைச்சர் ஜீவன் தொண்டமான், இந்த ஆசிரியர்களுடன் விசேட சந்திப்பொன்றை மேற்கொண்டுள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், "மலையக கல்வி வளர்ச்சியில் ஆரம்பக்காலம் முதல் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பின்வாங்காத செயற்பாடுகளை செய்து வருகின்றது. அதனடிப்படையில் இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்ட தமிழ் பாடசாலைகளில் காணப்படும் பட்டதாரி ஆசிரியர்களின் பற்றாக்குறையை தீர்க்க இந்த மாவட்டத்திலுள்ள பட்டதாரி ஆசிரியர்களை உரிய பாடசாலைகளுக்கு உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேநேரம் இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இதற்கமைய விரைவில் உரிய தீர்வு பெற்று தரப்படும்" என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## வடக்கின் அபிவிருத்திக்கு...

நேற்று வெள்ளிக்கிழமை (17) சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாண அபிவிருத்தி செயற்பாடுகள், கல்வி, சுற்றுலாத்துறை, காணி விடுவிப்பு, தீவுகளுக்கான போக்குவரத்து வசதிகள், தொழில் வாய்ப்புகள், முதலீட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

கால்நடை உற்பத்திகளை மேம்படுத்த வேண்டியுள்ளதாகவும், இயந்திர தொழில்நுட்ப பயன்பாட்டை மக்கள் மயப்படுத்த வேண்டும் எனவும் இதன்போது ஆளுநர் தெரிவித்தார்.

காணி விடுவிப்பு, விடுவிக்கப்பட்டுள்ள காணிகளுக்குள் மக்கள் பிரவேசிப்பதற்கான வசதிகள் தொடர்பிலும் அமெரிக்கத் தூதுவர், ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டார்.

ஜனாதிபதியின் வழிகாட்டுதல்களுக்கமைய காணி விடுவிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஆளுநர் தெரிவித்தார். அத்துடன் அண்மையில் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் பிரவேசிப்பதற்கான வீதிகள் உரிய நடைமுறைகளை பின்பற்றி திறக்கப்படுவதாகவும் ஆளுநர் கூறினார்.

வடக்கில் காணப்படும் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்கக்கூடிய கண்காட்சி செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரிடம் ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

வடக்குக்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்க தயாராக உள்ளதாக தெரிவித்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர், மாணவர்களுக்கு இலவச ஆங்கிலமொழி வகுப்புகளை ஆரம்பிக்க உள்ளதாகவும், அதற்கான ஒத்துழைப்புகளை ஆளுநரிடமிருந்து எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

27 வருடங்களின் பின்னர் அமெரிக்க அமைதி காக்கும் கழகத்தின் ஊடாக இலங்கையில் இலவச ஆங்கிலமொழி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமெரிக்கத் தூதுவர் கூறினார்.

## தோல்வி கண்ட நாடு...

திசை திருப்ப முடியாதென்றும் அவர் தெரிவித்துள்ளார். கொழும்பு வர்த்தக மாணவர் சங்கத்தின் (CCSU) மாதாந்த கருத்தரங்கிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வாழ்வாதாரம் என்பது ஒருவரின் வாழ்நாள் முழுவதும் அன்றாட வாழ்க்கைக்கு அவசியமான செயல்களின் தொகுப்பாக வரையறுக்கப்படுகிறது. தண்ணீர், உணவு, தீவனம், மருந்து, தங்குமிடம், உடை போன்றவற்றை பாதுகாப்பது போன்ற செயல்களில் அடங்கும். இவை எல்லாம் அதள பாதாளத்தில் வீழ்ந்து இருந்த போது நாட்டை மீட்ட ஒரே தனி மனிதர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே. வாக்குரிமையை பயன்படுத்துவது போன்ற ஜனநாயக உரிமைகளை அனுபவிக்க மக்கள் வாழ வேண்டும். வாழ வைத்தவர் யார்? ஜனாதிபதியாக பதவியேற்க அழைக்கப்பட்ட போது இந்தத் தலைவர்கள் எங்கே இருந்தனர். மக்களின் வாழ்வாதாரத்தின் காலத்தின் தேவையை எடுத்துரைக்கும் ஒரு முக்கியமான பரிமாணத்தில் தமக்கு எந்தத் திறனும் இல்லை என்று அவர்களே உறுதியாக நம்பினர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன் வந்திருக்கா விட்டால் இந்த தோல்வியுற்ற தேசத்துக்கு உலக நாடுகள் உதவ முன்வந்திருக்க தயாராக இருக்கவில்லை.

தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமை , நாட்டை தோல்வியுற்ற நாடாக மாற்றியிருந்தால் அத்தகைய தலைமையை தேர்ந்தெடுப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களும் நேரடியாக பொறுப்பு என்பதும் மறக்க மறுக்க முடியாத கருத்தாகும்.

மக்களின் வாழ்வுரிமைக்கு ஆதரவளிக்க சர்வதேச உதவி கிடைக்காததால் ஜனாதிபதியாக பதவியேற்க பயந்தவர்கள் இப்போது தேர்தலுக்கு செல்வதற்காக நாட்டை மீட்டெடுப்போம் என ஜனநாயக உரிமையை வலியுறுத்துகின்றனர்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க வென்றெடுத்த மக்களின் வாழ்வாதாரத்துக்கான சர்வதேச உதவி மற்றும் நெருக்கடி மேலாண்மை ஆகியவை இவர்களால் காப்பாற்றப்படுமென்று ஜனாதிபதி தெரிவில் சில அரசியல்வாதிகளின் விளிம்பு நிலை நன்மைகளுக்கு திசை திருப்பப்படுவதில் நம்பிக்கை கொள்ள முடியாது" எனத் தெரிவித்தார்.

## பாடசாலை மாணவர்களுக்கு...

அடுத்த வாரம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவிருக்கும் பொருளாதார மேம்பாட்டு சட்டமூலமூடாக இதனை நடைமுறைப்படுத்த இருப்பதாக அவர் தெரிவித்தார். கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் கடந்த வியாழக்கிழமை (16) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், "பாராளுமன்றத்துக்கு அடுத்த வாரம் சமர்ப்பிக்க இருக்கும் பொருளாதார மேம்பாட்டு சட்டமூலமூடாக மக்களுக்கு பல பொருளாதார சலுகைகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

அதனால் சட்டமூலத்துக்கு அனைவரும் ஆதரவளித்து மக்களுக்கு பொருளாதார சலுகைகளை பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும். இந்த சட்டமூலம் அனுமதிக்கப்பட்டதும் பொருளாதார அபிவிருத்திக்கு தடையாக இருக்கும் பல விடயங்கள் இதன் மூலம் இரத்தாகின்றன. அதேநேரம் மாணவர்களின் நலன் கருதி 2017ஆம் ஆண்டு எமது அரசாங்கத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த சுரக்ஷா காப்புறுதி 2022ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டிருந்தது. என்றாலும் இச்சட்டமூலம் ஊடாக மீண்டும் அந்த காப்புறுதி திட்டத்தை ஆரம்பிக்க இருக்கிறோம்.

பாடசாலை மாணவர்களின் சுகாதார நிலைமையை கட்டியெழுப்புவதற்கு இது பெரிதும் உதவியாக இருந்து வந்துள்ளது.

அமைச்சரவையின் தீர்மானத்துக்கமைய காப்புறுது தொடர்பில் நிபுணத்துவமிக்க சிறிலங்கா காப்புறுதி கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனத்தை சுரக்ஷா காப்புறுதிக்கு பங்காளியாக்கிக்கொள்ள இருக்கிறோம்.

இந்த காப்புறுதியின் கீழ் அரச அல்லது தனியார் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்காக 03 இலட்சம் ரூபாவரையும் வெளிக்கள சிகிச்சைக்காக 20ஆயிரம் ரூபாவரையும் மோசமான நோய் நிலைமைகளுக்காக 15 இலட்சம் ரூபாவரையும்ம நன்மை கிடைக்கிறது.

அனைத்து அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள், பிரிவெனா மற்றும் விசேட தேவையுடைய பாடசாலை மாணவர்களுக்காக இந்த சுரக்ஷா காப்புறுதி உரித்தாகிறது" என தெரிவித்தார்.

## கைதான நால்வரும்...

நீதிமன்ற நீதிபதி தஸ்னீம் பௌசான் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே சட்டத்தரணிகள் முன்வைத்த சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதிபதி, மேற்படி நால்வரையும் தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்ய உத்தரவிட்டார். இந்நபர்களுடைய பிணைக்கான நகர்த்தல் விண்ணப்பத்தை சட்டத்தரணி நாகராஜா மோகன் நேற்று தாக்கல் செய்திருந்தார். இதற்கு ஆதரவாக சட்டத்தரணி புவிராஜசிங்கம் முகுந்தன், சட்டத்தரணி தேவராஜா ரமணன் மற்றும் சட்டத்தரணி சயந்தன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

சேனையூர் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறிய குற்றச்சாட்டில் சம்பூர் பொலிஸாரினால் நால்வருக்கும் எதிராக ஐ.சி.சி.பி.ஆர் சட்டம் 3 (1) இன் கீழ் வழக்கு தொடரப்பட்டிருந்த நிலையில் அதற்கான போதியளவான ஆதாரங்கள் இல்லாத காரணத்தினால் அதனை நீக்கிக் கொண்டு வழக்கை சம்பூர் பொலிஸார் நகர்த்தல் பத்திரத்தின் மூலம் தண்டனை சட்டக்கோவை பிரிவின் கீழ் தாக்கல் செய்திருந்தனர். இந்நிலையில் குறித்த பிணை விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதி பிணை வழங்கி உத்தரவிட்டிருந்தார். இவ்வழக்கு மீண்டும் எதிர்வரும் 27ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

## முடிந்தவரை வீட்டில் சமைத்த...

பிரிவினர் சுட்டிக்காட்டினர். இந்த நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் உணவு மற்றும் பானங்களை தயாரிக்கும் போது இதன் மூலம் நோய் மற்றவருக்கும் பரவும் அபாயம் உள்ளதால், முடிந்தவரை வீட்டில் சமைத்த உணவு மற்றும் பானங்களை பெற்றுக்கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர்.

தைபொய்ட் பக்டீரியாவால் பாதிக்கப்பட்டவர்கள், அனைத்து சுகாதார மருத்துவ அலுவலர் அலுவலகங்களிலும் இதற்கான தடுப்பூசிகளை இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

இதேவேளை ஒவ்வொரு வருடமும் 09 மில்லியன் மக்கள் தைபொய்ட் நோயால் பாதிக்கப்பட்டுவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளதுடன், ஒவ்வொரு ஆண்டும் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பேர் இறப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இதன் அறிகுறிகள் நீண்ட நாள் காய்ச்சல், சோர்வு, தலைவலி, குமட்டல், வயிற்று வலி மற்றும் மலச்சிக்கல் அல்லது வயிற்றுப்போக்கு ஆகியவை காணப்படுமென உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

## மே 20ஆம் திகதிக்கு முன்...

நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். விவாதத்துக்கு பயந்து எதிர்கட்சித் தலைவர் சஜித் விவாதத்துக்கான திகதியை வழங்கவில்லையா? அல்லது சஜித் விவாதத்துக்கு வருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.க்கள் பயப்படுகிறார்களா? என்பதை புரிந்து கொள்ள முடியாதென்றும் அவர் கூறினார்.

கண்டியில் நேற்று முன்தினம் (16) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே நலிந்த ஜயதிஸ்ஸ எம்.பி. இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"மே 20ஆம் திகதிக்கு முன்னர் எந்த நாளிலேனும் எதிர்க்கட்சித் சஜித்துடன் அநுரகுமார திஸாநாயக்க விவாதம் நடத்தத் தயாரென தேசிய மக்கள் சக்தி கடந்த ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்திக்கு எழுத்து மூலம் அறிவித்ததாகவும், தேவைப்பட்டால் அது தொடர்பில் முடிவெடுக்க கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் மே 20க்கு முன் நான்கு நாட்களில் ஒரு திகதியை அறிவிக்குமாறும் கூறப்பட்டுள்ளது. எனினும் விவாதத்துக்கு இன்னும் நான்கு நாட்கள் மட்டுமே உள்ள போதும், அவர் விவாதத்தை தவிர்க்கிறார் என்பதையே அவர்களின் மௌனம் காட்டுகிறது" என்றார். ஐக்கிய மக்கள் சக்திக்குள் பொருளாதார திட்டம் தொடர்பில் தமது உறுப்பினர்களிடையே முரண்பாடுகள் காணப்படுவதாகவும், மின்சார சபையை தனியார் மயமாக்குவதற்கு ஆதரவாகவும் ஏனையோர் அதற்கு எதிராகவும் இருப்பதாகவும் முன்னாள் எம்.பி. தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தல் வர விருப்பதால் வேட்பாளர்களுக்கு இடையில் விவாதம் நடத்துவதே முக்கியமானதெனவும் ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் விவாதத்தை நடத்தாமல் ஓடிவந்து பாடசாலை மாணவர் முன்னிலையில் பிதற்றுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மனிதபுதைகுழி...

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி தொடர்பான வழக்கு கடந்த வியாழக்கிழமை (16) விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் அகழ்வுக்குரிய நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ள நிலையிலேயே, மனித புதைகுழி அகழ்வுப்பணிகளை மீள ஆரம்பிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கடந்த 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதியன்று முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பை பொருத்துவதற்காக கனரக இயந்திரத்தின் மூலம் அகழ்ந்த போது மனித புதைகுழியொன்று இனங்காணப்பட்டிருந்தது. இதனையடுத்து முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றம், முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி ஆகியோரின் கண்காணிப்பு மற்றும் பங்குபற்றுதல்களுடன், தொல்லியல்துறை பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் இவ்வாறு இனங்காணப்பட்ட மனித புதைகுழி இரண்டு கட்டங்களாக அகழ்வு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு இரு கட்டங்களாக இடம்பெற்ற அகழ்வின்படி இதுவரையில் குறித்த மனித புதைகுழியிலிருந்து 40 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு போராளிகள் பயன்படுத்தும் இலக்கத்தகடுகள், துப்பாக்கி தோட்டாக்கள், உடைகள் உள்ளிட்ட பல தடயப்பொருட்களும் மீட்கப்பட்டிருந்தன.

அத்தோடு இரண்டாம் கட்ட அகழ்வுப்பணிகளின் போது மனித புதைகுழி வளாகம் விசேட ஸ்கேன் கருவி மூலம் ஆய்வு செய்யப்பட்டிருந்தது. ஸ்கேன் கருவி ஆய்வின் மூலம் முல்லைத்தீவு, கொக்கிளாய் பிரதான வீதியின் கீழ்ப்பகுதியிலும் மேலும் பல மனித எச்சங்கள் இருப்பதும் கண்டறியப்பட்டிருந்தது.

இந்நிலையில் மனித புதைகுழி அகழ்வுக்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் முடிவுற்றதால் அகழ்வுப்பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. இவ்வாறான சூழலில் கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீளவும் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் மீளவும் அகழ்வு மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் ஜூலை மாதம் 04 ஆம் திகதி கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி வளாகத்தில் இந்த வழக்கு அழைக்கப்படவுள்ளதாக இந்த வழக்குடன் தொடர்புடைய சட்டத்தரணிகளுள் ஒருவரான கே.எஸ்.நிறஞ்சன் தெரிவித்தார்.

# இன்றைய பலன்கள்

**(18.05.2024)**

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
பொருளாதார பற்ற குறை அகலும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் சம்பளம் உயர்வு பற்றிய தகவல் வரலாம்.




**ரிஷபம் :**
திடீர் திடீரென சில பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். மனக் குழப்பம் அதிகரிக்கும். எந்த காரியத்தையும் உடனடியாக செய்ய இயலாது.



**மிதுனம்:**
நல்ல சம்பவங்கள் பலவும் நடைபெறும். நாடு மாற்றம் வீடு மாற்றமும் ஏற்படலாம். தேடிப் பார்த்தோம் கிடைக்காமல் இருந்த ஒரு பொருள் இப்பொழுது தேடாமல் கைக்கு கிடைக்கும்.



**கடகம்:**
தொழில்வலம் சிறப்பாக இருக்கும். உத்யோக மாற்றம் உறுதியாகலாம். வெளிநாட்டிலிருந்து வரும் தகவல் ஆதாயம் தருவதாக அமையும்.



**சிம்மம்:**
தொழில் வெற்றி நடை போடும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.




**கன்னி:**
நல்ல காரியங்கள் பலவும் இல்லத்தில் நடைபெறும். தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்கள் மூலம் நல்ல தகவல் கிடைக்கும்.



**துலாம்:**
சுபச் செலவுகள் அதிகரிக்கும். பெண்வழி பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். பெண் பிள்ளைகளின் திருமணத்தை முன்னிட்டு சீர்வரிசை பொருட்கள் வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.




**விருச்சிகம்:**
புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வீட்டிற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.



**தனுசு:**
எதிரிகளின் பலம் மேலோங்கி இருக்கும். இருப்பினும் உங்கள் ராசிநாதன் குருவோடு சுக்கிரன் இணைந்திருப்பதால் வழக்குகள் உங்களுக்கு சாதகமாக முடியும்.



**மகரம்:**
புனித பயணங்கள் அதிகரிக்கும். போராட்ட நிலை மாறும். புகழ்மிக்க ஆலயங்களுக்கு சென்று வழிபட்டு வருவீர்கள். தொழில் வளர்ச்சியில் இருந்த குறுக்கீடுகள் அகலும்.



**கும்பம்:**
சுகங்கள் சந்தோஷங்களும் வந்து சேரும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். குடும்பத்திலிருந்த கருத்து வேறுபாடுகள் அகலும்.



**மீனம்:**
உடன்பிறப்புகள் வழியில் பிரச்சனைகள் ஏற்படலாம். சொத்து பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்கும். முடிவுக்கு வந்த வழக்குகள் மீண்டும் தொடரலாம். இடமாற்றம் இனிமை தரும்.



## அரச துறையில்... (03ஆம் பக்க தொடர்ச்சி)

அரசியல் பொறிமுறையால் கொள்கையை உருவாக்க முடியும். அரச நிறுவனத்திற்கு கண்ணீருடன் வரும் மக்களை சிரித்த முகத்துடன் திருப்பி அனுப்பும் வகையில் அரச சேவை செயல்பட வேண்டும். அரச துறையில் ஊழல் மோசடிகளை தடுக்கும் வகையில் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் முறைகள் மூலம் கொடுக்கல், வாங்கல்களை நடத்த அவசியமான வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே உள்ள முறைகளை மேம்படுத்துவதற்கான கலந்துரையாடல்களையும் நாம் ஆரம்பித்துள்ளோம். அரச பொறிமுறை திறம்பட செயல்படுவதற்கான வசதிகளை செய்துகொடுக்க வேண்டும். மேலும், வெற்றிடமாக உள்ள பணியிடங்களுக்கு நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அரச உத்தியோகத்தர்களின் கடமைகள் தொடர்பிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்" என்றார்.

## பாராளுமன்றம் கலைப்பு;...

பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்படுமெனவும் அவர் அறிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முதலில் பாராளுமன்றத் தேர்தலா? அல்லது ஜனாதிபதித் தேர்தலா? நடைபெறும் என்ற குழப்பம் அரசியல் கட்சிகள் உட்பட பொதுமக்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் பிரகாரம் முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்பட வேண்டும். ஆனால் பாராளுமன்றத்தை கலைப்பதன் ஊடாக பொதுத் தேர்தலை நடத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளதென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தொலைபேசியில் ஜனாதிபதி...

பாராட்டை தெரிவித்துள்ளார். செந்தில் தொண்டமான் ஆளுநராக பொறுப்பேற்று ஒரு வருட காலத்தில்1.9 மில்லியன் பயனாளிகளுக்கு 8.032 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் 2,695 வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## வினாத்தாள் விநியோகிப்பதில்...

எவருக்கும் அநீதி இழைக்கப்படவில்லையென பரீட்சைகள் திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

எனினும் இது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில், சம்பவத்துக்கு முகம் கொடுத்த பரீட்சார்த்திகள் குறித்து தனித்தனியாக விசாரணை நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

## இலங்கை மீனவர்கள்...

கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும் பருத்தித்துறையை சேர்ந்தவர்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர்கள் நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, வேதாரண்யம் கரையோர பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## ஜனாதிபதி 24ஆம், 25ஆம் திகதிகளில்...

இரு நாள் விஜயம் மேற்கொள்ளும் ஜனாதிபதி, அங்கு கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார்.

இந்த கட்டடத் தொகுதியில் இரண்டு பெரிய தியேட்டர்கள், ஒரு சிறிய தியேட்டர், எண்டோஸ்கோபி மற்றும் மேமோகிராம், கருவுறுதல் பராமரிப்பு, யூரோடைனமிக் சேவைகள், கேட்போர் கூடம், முதுகலை மையம் மற்றும் மருத்துவ பணியாளர் அறை மற்றும் கற்பித்தல் வசதிகள் உள்ளன.

இந்தக் கட்டடத்தொகுதி 700 மில்லியன் ரூபா செலவில் கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டுக்கமைய நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கட்டடப் பொருட்களின் விலை அதிகரிப்பால் கட்டடத் தொகுதி இதுவரை நிறைவு பெறாமல் இருப்பதுடன் கட்டடத்தை முழுமையாக நிர்மாணித்து பூர்த்தி செய்ய 130 மில்லியன் தேவை என கணக்கிடப்பட்டுள்ளது.

# நகர்வலம்



பாரதியார் பல்கலைக்கழகமும் ஸ்ரீ சிவாக்கிரக யோகிகள் ஆதீனமும் இணைந்து நடாத்திய

## "பக்தி இலக்கியங்களில் பெண் அடியார்கள்" பன்னாட்டு கருத்தரங்கம்









பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் ஸ்ரீ சிவாக்கிரக யோகிகள் ஆதீனமும் இணைந்து நடாத்திய "பக்தி இலக்கியங்களில் பெண் அடியார்கள்" பன்னாட்டு கருத்தரங்கம் (11.05.2024) சனிக்கிழமை கும்பகோணத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இலங்கை மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உபதலைவர் முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் பிரதம விருந்தினராக பங்கேற்றார். பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் இரா. கார்த்திகேயனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பேராசிரியர் மு.சுமதி தலைமை தாங்கினார், மேனாள் விரிவுரையாளர் முனைவர் எம்.எஸ் லட்சுமி மற்றும் கலைமாமணி வாசுகி ராஜாராம் புதுச்சேரி தமிழ் வளர்ச்சிக் கழகம்,முனைவர் மா கவிதா முனைவர் சங்கீதா, தமிழ்த்துறை தலைவர் பேரா விவேகானந்தா மற்றும் கலை அறிவியல் மகளிர் கல்லூரிகளின் பேராசிரியர்கள் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர். திருக்கைலாய பரம்பரை ஸ்ரீ கந்த பரம்பரை வாமதேவ ஸ்ரீ சிவக்கிரக யோகிகள் ஆதீன 28வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மகாலிங்க பண்டார சன்னதி அவர்கள் ஆசியுரை நிகழ்த்தினார்கள். மற்றும் பேராசிரியர் சங்கீதா, பேராசிரியர் சந்தானலட்சு ஆகியோருடன் முனைவர் இரா கார்த்திகேயன் எழுதிய நான்கு நூல்களின் அறிமுகம் மற்றும் வெளியீட்டு நிகழ்வும் முனைவர் சதீஷ் சிவலிங்கம் முந்நிலையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் தமிழ் இலக்கியம், ஆன்மீக செயற்பாட்டாளர்கள் உயர்கல்வித் துறை பல்கலைக்கழக ஆய்வுநிலை மாணவர்களும் கலந்து கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிலாபம், முன்னேஸ்வரம், திமிலை

## அருள்மிகு கண்ணகை அம்மன் மகோற்சவம் திங்கள் ஆரம்பம்

உடப்பு குறூப் நிருபர்

வரலாற்று சிறப்பு வாய்ந்த சிலாபம், முன்னேஸ்வரம் திமிலை ஸ்ரீகண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்துக்கான கொடியேற்றம் நாளை மறுதினம் 20 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து 21 ஆம் திகதி சக்திக் கரகமும்,22 ஆம் திகதி விஷேட பூஜையும், 23 ஆம் திகதி மஞ்சள் நீராடல் நிகழ்வும்,24 ஆம் திகதி இடும்பன் பூஜையும் நடைபெற்று அன்றைய தினம் மகேஸ்வர பூஜையும் (அன்னதானம்) நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

## கண்டி ஸ்ரீ கதிர்காம ஆலயத்தின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம்

கண்டி, அருள்மிகு ஸ்ரீ கதிர்காம ஆலயத்தின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நாளை 19/05/2024 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 : 55 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்று ஆலயத்திலிருந்து புறப்படும் புதிய சித்திரத்தேர் பவனியில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரும் அழைக்கப்படுவதாக இலங்கை, இந்திய நட்புறவு ஒன்றியத்தின் தலைவர் மு . தீபன் தெரிவித்துள்ளார்.

## டிஸ்கோ ராஜா மன்றம் நடத்தும் மாபெரும் புத்தாண்டு விழா

டிஸ்கோ ராஜா மன்றம் நடத்தும் மாபெரும் புத்தாண்டு விழா இன்று 18ஆம் திகதி சனிக்கிழமையும் நாளை 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 8 மணிமுதல் இரவு வரை கொழும்பு 13, ஆட்டுப்பட்டித் தெருவில் நடைபெறவுள்ளது.

சுப்பர் ஸ்டார் ரஜனிகாந்த், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் போன்ற நடிப்பில் சிறந்த நடிகர்களை தன் நடிப்பாற்றலால் வெளி,க்காட்டி பேரும் புகழும் பெற்று வருபவர் இவர். இவர் வருடாந்தம் தமிழ், சிங்கள புத்தாண்டையொட்டி கொழும்பு 13, ஆட்டிப்பட்டித் தெருவில், அப்பிரதேசத்தில் உள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களை ஒன்றுபடுத்தி இரு நாட்களாக பல்வேறு விளையாட்டுப் போட்டிகளையும் கலை கலாசார நிகழ்வுகளையும் நடத்தி வருபவர் இவர்.

இவ்விழாவில் இன்று காலை 11 மணிக்கு கலைஞர்கள் பங்குபற்றும் சங்கீத கதிரைப் போட்டி நடைபெறவுள்ளது. இதில் நாடகம், மேடை நாடகம், இசைக்கலைஞர்கள் என பல தரப்பட்ட கலைஞர்களும் பங்குபற்றவுள்ளார்கள்.

50 மீட்டர் ஓட்டப் போட்டி, பனிஸ் உண்ணும் போட்டி, பலூன் உடைக்கும் போட்டி, யானைக்கு கண் வைத்தல், முட்டி ஒடைத்தல், தலையணை அடி, வழுக்கு மரம் ஏறுதல், அஞ்சல் ஓட்டப்போட்டி, சங்கீதக் கதிரை போட்டி, மாவில் நாணயம் தேடுதல், தேசிக்காய் கரண்டி ஓட்டப் போட்டி, விநோத உடைப் போட்டி, கயிறு இழுத்தல் போட்டி என சிறுவர் சிறுமியருக்கும் குடும்பப் பெண்களுக்கும் தாய், தந்தையருக்கும் என பல்வேறு போட்டிகளை நடத்தவுள்ளார். மாலையில் மாபெரும் மேடையில் இதன் பரிசளிப்பை நடத்தவுள்ள அதேவேளை தமிழ், சிங்கள, முஸ்லிம் கலைஞர்களின் நடன நிகழ்வுகளையும் நடத்தவுள்ளார். இம்முறை இவருடன் கொழும்பிலுள்ள கலைஞர்கள் அனைவரும் எந்தவிதமான இன, மத, மொழி வேறுபாடுகளும் இன்றி கலந்து கொள்ளவுள்ளார்கள்.

LAKE HOUSE

தினகரன் THINAKARAN 92ND ANNIVERSARY

ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் கௌரவிப்பு விழா

தினகரனின் 92 ஆவது ஆண்டு நிறைவையொட்டி

## பேருவளையில் ஓய்வுபெற்ற அதிபர்களையும் ஆசிரியர்களையும் கௌரவிக்கும் விழா நாளை

### கல்விமான்கள், அரச உயரதிகாரிகள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பேருவளை தினகரன் வாசகர் வட்ட அங்கத்தவர்களும் பங்கேற்பு



சமூகத்திற்கு பயன்மிக்க சிறந்த பிரஜைகளையும் தொழில்வாண்மையுடன் கூடிய சிரேஷ்ட பிரஜைகளையும் உருவாக்கப் பாடுபடுபவர்கள் அதிபர்களும் ஆசிரியர்களும் என்றால் மிகையாது. ஒழுக்கமுள்ள பண்பாடு மிக்க நற்பிரஜைகளை உருவாக்கப் பாடுபடுபவர்களும் கல்விச் சமூகத்தைச் சார்ந்த இந்த அதிபர்களும் ஆசிரியர்களுமே. இவர்கள் தாங்கள் அறிந்த அனைத்து விடயங்களையும் தம்மால் முடிந்த வயது வரை மாணவர்களுக்காக கற்றுக் கொடுத்து விட்டு ஓய்வு பெற்று ஒதுங்கி இருக்கிறார்கள். இவர்களுக்கு தங்களிடம் கற்ற மாணவர்களை காணும் போது அவர்கள் வந்து தங்களை அறிமுகப்படுத்தி கதைக்கும் போது அளவில்லா ஆனந்தம் ஏற்படுகிறது. அத்தகைய மாண்புமிக்க மானிடர்களை கௌரவிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த மாபெரும் விழாவை தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் 92 ஆவது பிறந்த தினத்தையொட்டியதாக சமூக சேவையாளர் பாஸி சுபைர் இந்த மாபெரும் கௌரவிப்பு விழாவை நடத்த முன்வந்துள்ளார்.

பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் வித்தியாலய அஷ்செய்க் முஸ்தபா வலியுல்லாஹ் கேட்போர்கூடத்தில் ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் கௌரவிப்பு விழா தினகரனின் 92 ஆவது ஆண்டு நிறைவையொட்டி களுத்துறை மாவட்டத்தில் உள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளின் ஓய்வுபெற்ற அதிபர்கள் மற்றும் பேருவளை தேர்தல் தொகுதியில் உள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளின் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.




இந்த கௌரவிப்பு விழா பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் வித்தியாலய அஷ்செய்க் முஸ்தபா வலியுல்லாஹ் கேட்போர் கூடத்தில் நாளை 19.05.2024 ஆம் திகதி காலை 9 மணிக்கு தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் நடைபெறவுள்ளது. .

இதற்கான ஏற்பாடுகளை சமூக சேவையாளர் எம். பாஸி ஸுபைர் மேற்கொண்டு வருகிறார்.

பேருவளைத் தேர்தல் தொகுதியில் உள்ள பாடசாலைகளான மக்கொன அல்ஹஸனியா மகா வித்தியாலயம், சீனன்கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை, சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி, மாளிகாஹேன ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை, மருதானை அல்பாஸியதுல் நஸ்ரியா பெண்கள் பாடசாலை, மஹகொட ஐ.எல். எம். ஸம்ஸுதீன் வித்தியாலயம், தர்காநகர் ஸாஹிராக் கல்லூரி, தர்காநகர் அல்ஹம்றா மகா வித்தியாலயம், தர்காநகர் முஸ்லிம் பெண்கள் தேசிய பாடசாலை ஆகியவற்றில் கடமை புரிந்து ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் களுத்துறை மாவட்டத்தில் உள்ள தமிழ் மொழிமூல தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் கடமையாற்றி ஓய்வு பெற்ற அதிபர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேலதிக விபரங்களை 077 0812420 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொழிலதிபரும் சமூக சேவையாளருமான எம். பாஸி ஸுபைரை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

மலைச்சாரல்



# வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை

லுணுகல நிருபர்

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை இம்மாதம் 31ஆம் திகதி மற்றும் எதிர்வரும் ஜுன் மாதம் முதலாம் திகதி ஆகிய இரண்டு தினங்களில் முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 4.00 மணிவரை பதுளை வீல்ஸ் பார்க் பூங்கா விளையாட்டுத்திடலில் நடைபெறவுள்ளது.

தொழிலாளர் திணைக்களத்தினதும் இலங்கை மத்திய வங்கியினதும் அதிகாரிகளின் பங்கேற்பில் நடைபெறவுள்ள நடமாடும் சேவை பதுளை மாவட்டத்தில் உழைக்கும் மக்களுக்கான தேவைகளை நிறைவேற்றக்கூடிய சேவை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமாகும். அன்றைய தினம் ஊழியர் சேமலாப நிதியின் பதிவை சரிபார்த்தல், ஊழியர் சேமலாப நிதிக்கு பதிவு செய்யப்படாத உறுப்பினர்களை பதிவு செய்தல், ஊழியர் சேமலாப நிதியின் பதிவு எண்கள் அல்லது தேசிய அடையாள அட்டை எண் அல்லது பெயர் பிழைகளிருப்பின் திருத்தங்களைச் செய்தல், ஊழியர் சேமலாப நிதியில் 30 சதவீதத்தைப் பெறுவதற்கான தகைமையை சரிபார்த்தல்,

இறந்த உறுப்பினர்களின் நலன்கள் தொடர்பான சிக்கல்களுக்கு தீர்வு வழங்குதல், ஊழியர் சேமலாப நிதியினைப் பிணையாக வைத்து வழங்கப்படும் வீட்டுக்கடன்களை வழங்குதல், ஊழியர் சேமலாப நிதியிலிருந்து பலன்களைப் பெறுவது தொடர்பான தொழிலாளர் பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்குதல் போன்ற தொழிலாளர்களின் தேவைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியுமென பதுளை மாவட்ட உதவி தொழில் ஆணையாளர் குறிப்பிட்டார்.

0552223358 தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

# இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகராயலத்தின் ஏற்பாட்டில் கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலைக்கு மருத்துவ உதவிகள்

இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகராயலத்தின் கவுன்சிலர் வைத்தியர் அன்வர் ஹம்தானியின் அனுசரணையுடன் கண்டி பள்ளிவாசல்கள் சம்மேளனம் மற்றும் கொரோனா செயலணி அமைப்பினால் கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு நவீன வசதிகளைக் கொண்ட கட்டில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. இவ்வைபவம் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் இரந்த தலைமையில் நடைபெற்றது.

கண்டி பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் கே. ஆர். சித்தீக் தலைமையிலான குழுவினர் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் இரந்தவிடம் உத்தியோகபூர்வமாக இதனை கையளித்தனர்.



இதன்போது முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஹிதாயத் சத்தார், வைத்தியாலையின் சுகாதார அதிகாரிகள், பள்ளிவாசல் சம்மேளனத்தின் செயலாளர் என். எம்.எம். மன்சூர், உப தலைவர் ரீஸா வாஹிட், உப செயலாளர் மௌலவி ஸக்கி, கட்டுகஸ்தோட்டை ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள், கொரோனா செயலணி அமைப்பின் உறுப்பினர் எச்.எல்.எம். இல்ஹாம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

படங்கள் :இக்பால் அலி

# எல்ல வெல்லவாய வீதியில் மண்சரிவு அபாயம்



தற்காலிகமாக மூடப்பட்டிருந்த எல்ல வெல்லவாய வீதி போக்குவரத்துக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் பூரண கண்காணிப்பின் கீழ், மிகுந்த அவதானத்துடன் குறித்த வீதியில் போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடும் மழை காரணமாக நேற்றுமுன்தினம் (16) மாலை 6 மணி முதல் நாளை காலை 6 மணி வரை எல்ல வெல்லவாய வீதி தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது.

எல்ல வெல்லவாய வீதியில் கரந்தகொள்ள மலித்தகொல்ல இடத்தில் மண்சரிவு மற்றும் மண்சரிவு அபாயம் உள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பதுளை மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஈ.எம்.எல்.உதயகுமார தெரிவித்தார்.

எவ்வாறாயினும், (17) மழை தொடர்ந்தால் இந்த வீதி மீண்டும் ஆபத்தானதாக மாறக்கூடும் என அனர்த்த முகாமைத்துவ பிரிவு எச்சரித்துள்ளது.

எனவே, எந்த நேரத்திலும் குறித்த வீதி மீண்டும் மூடப்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் முன்னாள் பணிப்பாளர் மர்ஹூம் நூராணியா ஹசன் நினைவுகள்







இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவையில் எதிர்வரும் செவ்வாய் இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சித் தொடரில் முன்னாள் முஸ்லிம் சேவை பணிப்பாளர் மர்ஹூம் நூராணியா ஹசனின் நினைவுகள் பரிமாறப்படவிருக்கின்றன.

பௌசுல் ஹசன் எனும் இயற்பெயர் கொண்ட இவர் தான் கல்விகற்ற மாவனல்ல உயன்வத்த நூரணியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் முதல் பெயரைத் தன்னோடிணைத்து 'நூரணியா ஹசன்' என்ற பெயரில் இலக்கிய, ஊடக உலகில் வலம் வந்தார். இவர் கலைத்துறை, அரசியல் விஞ்ஞானம் , பொருளியல் பட்டதாரியாவார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்பிரிவில் பொறுப்பான பதவியில் இணைந்து கொண்ட இவர் முஸ்லிம் சேவையின் கட்டுப்பாட்டாளராகி 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அச்சேவையின் பணிப்பாளரானார். சமகாலத்தில், தென்றல் அலைவரிசையிலும் பணிப்பாளராக பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

1989 களில் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தினகரன் பத்திரிகையின் ஒப்புநோக்காளராக கடமையாற்றினார்.தினகரன் பத்திரிகையில் விளையாட்டு செய்திகளை அதிகமாக எழுதி வந்த இவர், கிரிக்கட் விளையாட்டு பற்றிய ஆழமான அறிவு கொண்டவராக இருந்தார். அதனால் சிறந்த கிரிக்கட் வர்ணனையாளராக திகழ்ந்தார்.

கிரிக்கெட் விளையாட்டின் தாற்பரியங்களை விளக்கி 'அஸ்கிரிய முதல் லாகூர் வரை" எனும் நீண்ட கட்டுரைத் தொடரை தினகரனில் எழுதினார். அதனை நூலாகவும் வெளியிட்டு இலங்கை கிரிக்கெட் வீரர்களின் அபிமானத்தை வென்றார். இவரது நினைவுகளை சிரேஷ்ட ஒலிபரப்பாளர், அறிவிப்பாளர் கே.ஜெய கிருஷ்ணா, பிறை எப்.எம். பிரதி பணிப்பாளர் பஷீர் அப்துல் கையூம் ஆகியோர் பகிர்ந்து கொள்ளவுள்ளனர். நிகழ்ச்சியை எம். எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்க முஸ்லிம் சேவைப் பொறுப்பாளர் பாத்திமா ரினூஷியா தயாரிக்கவுள்ளார்.

# பஸ் மோதி பெண் உயிரிழப்பு

கம்பளை நிருபர்

கம்பளை எத்கால்ல பஸ் தரிப்பிடத்தில் நின்றுக் கொண்டிருந்த பெண்ணொருவரை பஸ் மோதி விபத்துக்குள்ளானதில் அப்பெண் உயிரிழந்துள்ளார்.

எத்கால்ல பொலிஸ்பிரிவுக்குட்பட்ட எத்கால்ல நகரிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கம்பளை நகரிலிருந்து உலப்பனை வரை சென்ற பாடசாலை மாணவர்களை ஏற்றி செல்லும் பஸ் வண்டியே இவ்வாறு பெண்ணை மோதியுள்ளது.

70 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு விபத்தில் உயிரிழந்துள்ளார். சடலம் கம்பளை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை எத்கால்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஊவா மாகாண தமிழ் சாகித்ய விழா ஆய்வரங்கம்

லுணுகல நிருபர்

ஊவா மாகாண தமிழ் சாகித்ய விழா ஜனாதிபதி செயலகத்தின் ஆலோசனை வழிகாட்டலில் ஊவா மாகாண கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஜூன் மாதம் நடுப்பகுதியில் பதுளையில் நடைபெறவுள்ளது.

இதன் ஓர் அங்கமாக நடத்தப்படவுள்ள ஆய்வரங்கம் 'சமூக மாற்றத்திற்கான கலை, இலக்கிய, கலாசார மற்றும் தொழிற்சங்க முயற்சிகள்: நேற்று : இன்று: நாளை"★ என்ற தலைப்பில் ஊவா மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகளை முன்னிறுத்தி நடைபெறவுள்ளது.

ஆய்வரங்கத்தை ஊவா மாகாண கலாசார அமைச்சு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் என்பன இணைந்து ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றன. ஆய்வரங்கக் கருப்பொருளுடன் தொடர்பான விடயங்களை முன்னிறுத்தியதான ஆய்வு கட்டுரைகள் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆசிரியர் கலாசாலை மற்றும் கல்வியில் கல்லூரி விரிவுரையாளர்கள்,சுயாதீன ஆள்வார்கள், பட்டப்படிப்பிற்காக குறித்த துறைகளில் ஆய்வுகளை மேற்கொண்ட பட்டதாரி மாணவர்கள் மற்றும் ஆய்வில் ஆர்வமுடையவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. முழுமையான ஆய்வுக் கட்டுரைகளை tamilsahi2024@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 'எதிர்வரும் மே 31 ஆம் திகதிக்கு முன்னர்' அனுப்பி வைக்குமாறு ஆய்வரங்க ஏற்பாட்டுக் குழு கேட்டுக்கொள்கின்றது. ஆய்வரங்கம் தொடர்பான மேலதிக விபரங்களை 0771898978 என்ற கைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

# 'அசோகவனத்தில் சீதையம்மன்' நூல் வெளியீட்டு விழா



நுவரெலிய சீதையம்மன் ஆலயத்தில் நடைபெறும் மகா கும்பாபிஷேக பெருவிழாவை முன் னிட்டு கலாபூஷணம் மாத்தளை பெ.வடிவேலன் எழுதிய 'அசோக வனத்தில் சீதையம்மன்" என்னும் ஆய்வு நூல் ஆலய பரிபாலனசபைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி வே.இராதாகிருஷ்ணனால் நாளை 19ஆம் திகதி நுவரெலிய சீதையம்மன் ஆலயத்தில் வைத்து வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

# குருநகர் தூய்மைப்படுத்தும் நடவடிக்கையில் வட.ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் பங்கேற்பு



குருநகர் கரையோர வீதி தூய்மைப்படுத்தும் நடவடிக்கையில் வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் கலந்துகொண்டார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையினால் முன்னெடுக்கப்படும் சுற்றுச் சூழல் தூய்மைப்படுத்தலும், விழிப்புணர்வு செயற்பாடும் குருநகர் பகுதியில் நேற்று நடைபெற்றது. வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸ், வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் உள்ளிட்ட பலரும் கரையோர தூய்மைப்படுத்தல் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

குருநகர் 26 ஆம் வட்டார கரையோர வீதியில் நேற்று ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்திட்டத்தை யாழ்ப்பாணம் முழுவதும் அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. வீட்டு கழிவுகளை வீதியில் வீசுவதை தடுக்கும் வகையில், அவற்றை தரம் பிரித்து சேகரிக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள பிரதான வீதியில் முன்னெடுக்கப்பட்ட மர நடுகை நிகழ்விலும் வடக்கு மாகாண ஆளுநர் கலந்துகொண்டார்.

# பனை அபிவிருத்திச் சபை அலுவலகத்துக்கு அமெரிக்க தூதுவர் ஜூலி சங் விஜயம்



யாழ். விசேட நிருபர்

பனை அபிவிருத்திச் சபை அலுவலகத்தை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சாங் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை பார்வையிட்டார்.

யாழ்ப்பாணம் கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் தலைமை காரியாலயத்திற்கு நேரில் சென்ற இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் பார்வையிட்டு பனை உற்பத்தி பொருட்களை ஆராய்ந்தார்.

இதன்போது பனை அபிவிருத்திச் சபை தலைவர் கிருஷ்ணராஜா பத்திராஜா, உத்தியோகத்தர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியாட்சகர் தனபால உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பனை அபிவிருத்திச் சபையினுடைய உற்பத்திகள் தொடர்பான கருத்தரங்கு ஒன்றும் இடம்பெற்றது.

# புதுக்குடியிருப்பில் மர்ம பொதியால் பரபரப்பு

ஓமந்தை விஷேட நிருபர்

புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் காணப்பட்ட மர்ம பொதியினால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு இலங்கை வங்கிக்கு அருகாமையில் மர்ம பொதியொன்று அடையாளம் காணப்பட்டுள்ளதையடுத்து அப்பகுதி மக்கள் மத்தியில் பரபரப்பு நிலை ஏற்பட்டிருந்தது. இவ்விடயம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் மர்ம பொதியை மீட்டு உரிமையாளரிடம் ஒப்படைத்தனர்.



சுட்டுக்கொலை செய்யப்பட்ட யாழ்.மாநகர முன்னாள் முதற் பெண் முதல்வர் திருமதி. சரோஜினி யோகேஸ்வரனின் 26ஆவது நினைவுநாள் அண்மையில் நாச்சிமார் கோவிலடி தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நடைபெற்றது.

# மூன்று பிள்ளைகளின் தாய் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை

## கணவரின் விளக்கமறியல் நீடிப்பு

நாகர்கோவில் விஷேட நிருபர்

வடமராட்சி கிழக்கு உடுத்துறை பகுதியில் இளம் குடும்பப் பெண் ஒருவர் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கணவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த10 ஆம் திகதி அதிகாலை உடுத்துறை வடக்கு பகுதியை சேர்ந்த ஜெகசீலன் சங்கீதா (வயது 44) என்ற மூன்று பிள்ளைகளின் தாய் வீட்டில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை சட்ட வைத்திய அதிகாரி கனகசபை வாசுதேவா பிரேத பரிசோதனை மேற்கொண்டதில் துணியினால் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதாகவும் உடலில் நகக்கீறல் காயங்களும் காணப்பட்டதாக அறிக்கையிட்டிருந்தார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த காங்கேசன்துறை குற்ற தடுப்புப் பொலிஸார் கடந்த 15ஆம் திகதி கணவனை கைது செய்து நேற்று முன்தினம் மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் சந்தேகநபரான கணவனை கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கனமழை பெய்யும் சாத்தியம்

யாழ்.விசேட நிருபர்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் 20ஆம் திகதி வரையில் கனமழை கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார். கடந்த 13ம் திகதி இலங்கைக்கு தெற்கே வங்காள விரிகுடாவில் உருவாகிய காற்றுச் சுழற்சி தற்போது தீவிரமடைந்துள்ளது.

இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் தற்போது கிடைக்கும் மழை எதிர்வரும் 20ம் திகதி வரை தொடரும் வாய்ப்புள்ளது. குறிப்பாக 18,19 ம் திகதிகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கனமழை கிடைப்பதற்கான வாய்ப்புள்ளது.

வருடந்தோறும் சித்திரை சிறு மாரி என்ற கருத்து எங்களிடையே மிக நீண்ட காலமாக உள்ளது. இதனைச் சிலர் 'சித்திரைக்குழப்பம்' என்ற பெயரிலும் அழைப்பர். இம்முறை சித்திரைத் குழப்பம் சித்திரை மாத இறுதிநாட்களில் (தமிழுக்கு) காற்றுச் சுழற்சியோடு ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை எதிர்வரும் 20ம் திகதிக்கு பின்னர் கிழக்கு வங்காள விரிகுடாவில் மேலுமொரு காற்றமுழத்த தாழ்வு நிலை உருவாகும் வாய்ப்புள்ளது. எனினும் இதனை எதிர்வரும் 19 ம் திகதிக்கு பின்னரே உறுதிப்படுத்த முடியும் அதேவேளை இந்த நிகழ்வுகளின் பின்னர் மீண்டும் வெப்பநிலை அதிகரிக்கும் என மேலும் தெரிவித்தார்.

# இலங்கையின் முதலாவது காலநிலை அமர்வு: அனுசரணையாளராக அமானா கைகோர்ப்பு

காலநிலை மீட்சியுடனான பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வகையில், அறிமுக Code Red Sri Lanka Climate Summit 2024 நிகழ்வின் பிரதான அனுசரணையாளராக அமானா வங்கி கைகோர்த்திருந்தது. இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் முன்னெடுக்கப்பட்ட இந்த மாநாடு, சர்வதேச மற்றும் இலங்கை உள்ளம்சங்களின் அடிப்படையில், பிரதான பொருளாதாரத் துறைகளுக்கு ஏற்படக்கூடிய தடங்கல்கள் வெளிப்படுத்தி, காலநிலை மாற்ற நெருக்கடி தொடர்பான ஆழமான புரிதலை கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டிருந்தது. காலநிலை நெருக்கடி தொடர்பில் தீர்வு காண்பதற்கு புத்தாக்கமான தொழில்நுட்பங்கள் மற்றும் தீர்வுகள் தொடர்பில் கவனம் செலுத்தியதுடன், இலங்கையின் நிறுவனங்களுக்கு வியாபார வாய்ப்புகளுக்கான திறவுகோலையும் வெளிப்படுத்தியிருந்தது.

மூன்று நாள் மாநாடு, மே மாதம் 7 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை நடைபெற்றதுடன், 15 வெளிநாட்டு பிரதிநிதிகள் அடங்கலாக 50க்கும் அதிகமான பேச்சாளர்கள் அடங்கியிருந்தனர். காலநிலை மாற்றத்தை தவிர்க்கும் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடல்கள், குறைந்த காபன் மற்றும் காலநிலை மீட்சி பொருளாதாரத்துக்கு அவசியமான கொள்கை மாற்றங்கள் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டிருந்தன. வழமையான அமர்வுகளுக்கு மேலதிகமாக, பிரத்தியேகமான பிரதம நிறைவேற்று அதிகாரி அமர்வு முன்னெடுக்கப்பட்டதுடன், இதர நாடுகளின் முன்னணி பிரதம நிறைவேற்று அதிகாரிகளும், வியாபார உரிமையாளர்களும் கலந்து கொண்டு, வியாபார தீர்மானங்களில் காலநிலை மாற்றம் தொடர்பான தமது ஆழமான புரிதல்களை வெளிப்படுத்தியிருந்தனர். இந்த மாநாடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்த கைகோர்ப்பு தொடர்பில் அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர் கருத்துத் தெரிவிக்கையில், “நிலைபேறான வங்கியியல் செயன்முறைகளை ஊக்குவிக்கும் எமது பிரத்தியேகமான வியாபார மாதிரியின் அடிப்படையில், இலங்கை வர்த்தக சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த அறிமுக Sri Lanka Climate Summit உடன் கைகோர்த்திருந்ததையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம்” என்றார்.

தினகரன் வர்த்தக உலா

எம்.எஸ். பாஹிம் E-mail: businesstkn@gmail.com

# அதிஷ்டான கூட்டாண்மையை புதுப்பிக்கும் HNBGI மற்றும் ஹட்டன் நெஷனல் வங்கி



வேகமாக வளர்ந்து வரும் பொதுக் காப்புறுதி வழங்குனர்களில் ஒன்றான HNB General Insurance Limited (HNBGI), HNB குழுமத்தின் பெருமைமிக்க ஒரு உறுப்பினராகும். இது Hatton National Bank PLC (HNB) உடனான தனது கூட்டாண்மையைப் புதுப்பித்தமையானது முக்கிய மைல்கல்லைக் குறிக்கிறது. இந்த கூட்டாண்மை விரிவாக்கமானது, HNB இன் ‘அதிஷ்டான’ கடன் திட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு அணுகக்கூடிய காப்புறுதி சலுகைகள் மற்றும் சேவைகளின் வகைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கைப் பிரஜைகளுக்காக வடிவமைக்கப்பட்ட HNB சேமிப்புத் திட்டமான 'அதிஷ்டான', வெளிநாட்டுக்கு புறப்படுவதற்கு முன்னர் பெற்ற கடன்களை எளிதாக்குவது தொடர்பான நன்கு அறியப்பட்ட கடன் திட்டமாகும். வாடிக்கையாளர்களுக்கு விரிவான காப்புறுதித் தொகையை வழங்குவதற்காக HNBGI மற்றும் HNB இடையேயான கூட்டாண்மையுடன் 2023 இல் ஆரம்பிக்கப்பட்ட அதிஷ்டான திட்டத்தின் புதுப்பித்தலின் மூலம் குறிப்பிடும்படியான மாற்றத்திற்கு உட்பட்டுள்ளதுடன், மறுசீரமைக்கப்பட்டு மிக விரிவான சேவைகள் மற்றும் நன்மைகளை அறிமுகப்படுத்துகிறது. இதன் மூலம் வெளிநாட்டில் வேலை தேடுபவர்களுக்கான நிதிப் பாதுகாப்பு மற்றும் சுய பாதுகாப்பை உறுதி செய்கிறது.

புதுப்பிக்கப்பட்ட கூட்டாண்மையின் மூலம், HNBGI தற்போது இலங்கையின் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது நேரடி குடும்ப உறுப்பினர்களின் மேலதிக வகைகளை உள்ளடக்கியுள்ளது.

HNB மற்றும் HNBGI இடையேயான அதிஷ்டான கூட்டாண்மையானது, அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களின் சங்கத்துடன் (ALFEA) இணைந்து முன்னெடுக்கப்படும் ஒரு திட்டமாக காணப்படுகிறது.

# 2024 ஆண்டு விற்பனை மாநாட்டில் சிறப்பான புதிய சகாப்தத்திற்குள் பிரவேசிக்கும் Softlogic Life







இலங்கையின் இரண்டாவது பெரிய ஆயுள் காப்புறுதி நிறுவனமான Softlogic Life, பிரமாண்டமான புதிய சகாப்தத்திற்குள் பிரவேசித்துள்ளது. அண்மையில் நடைபெற்ற வருடாந்த விற்பனை மாநாட்டில் 650 இற்கும் அதிகமானோர் கலந்துகொண்ட சிறந்த விற்பனையாளர்களின் சாதனைகள் கொண்டாடப்பட்டன. "பெருமையின் புதிய சகாப்தம்" என்ற தொனிப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு, ஏஜென்சி, ஆல்டர்நேட்டிவ்ஸ் மற்றும் மைக்ரோ சேனல்கள் ஆகிய மூன்று விற்பனைத் தலைப்புகளின் கீழ் 2023 இன் சிறந்த செயல்திறன் கொண்டவர்களின் சிறந்த சாதனைகளை அங்கீகரித்து கொண்டாடுவதற்கான ஒரு தளமாக இந்த நிகழ்வு செயல்பட்டது.

SoftLogic Life இன் வெற்றியின் முக்கிய பங்காற்றும் விதிவிலக்கான விற்பனைப் படையின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பு, நிறுவனத்தை வருடா வருடம் முன்னோக்கி கொண்டு சென்றது, மேலும் இந்த ஆண்டு 2023 அத்தகைய சிறந்த சாதனைகளை கொண்டாட அர்ப்பணிக்கப்பட்டது. சவாலான காலங்களில் வாடிக்கையாளர்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றியதற்காகவும், வணிகங்களில் புதிய வளர்ச்சிக்கான உறுதியான அர்ப்பணிப்பிற்காகவும் சுமார் 150 சிறந்த நபர்கள் இங்கு கௌரவிக்கப்பட்டனர்.

2023 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GWP) 26.3 பில்லியன் ரூபாவாக 14% என்ற உயர்மட்ட வளர்ச்சியுடன், சவாலான பொருளாதாரச் சூழலுக்கு மத்தியில் Softlogic Life இன் பின்னடைவு மற்றும் மாற்றியமைக்கும் தன்மையின் மீது இந்த உயர் செயல்திறன் கொண்டவர்களின் குறிப்பிடத்தக்க முயற்சிகள் மகத்தான வெளிச்சத்தை பிரகாசிக்கின்றன. ஹெல்த் இன்சூரன்ஸ் சந்தையில் 35% பங்குகளை வைத்திருக்கும் நிறுவனம், 1.3 மில்லியனுக்கும் அதிகமான உயிர்களைப் பாதுகாக்கும் வகையில், ஹெல்த் இன்சூரன்ஸ் துறையில் சந்தைத் தலைவராகத் தொடர்ந்தது. அதன் காப்புறுதித்தாரர்களுக்கு 13.5 பில்லியன் கோரிக்கைகள் மற்றும் நன்மைகள், Softlogic Life அதன் ஒட்டுமொத்த சந்தைப் பங்கை 17.2% ஆக அதிகரித்து சந்தையில் இரண்டாவது பெரிய ஆயுள் காப்பீட்டு நிறுவனமாகத் தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

# 2024 இலங்கையின் 'மிகவும் விரும்பப்படும் வங்கி' வர்த்தக நாமமாக தரப்படுத்தப்பட்ட கொமர்ஷல் வங்கி

கொமர்ஷல் வங்கியானது முன்னணி வர்த்தக சஞ்சிகையான LMD ஆல் 2024 ஆம் ஆண்டில் இலங்கையின் 'மிகவும் விரும்பப்படும் வங்கி' வர்த்தக நாமமாகவும், ஒட்டுமொத்தமாக நாட்டில் சேவைத்துறையில் இரண்டாவதாக 'அதிகம் விரும்பப்படும்' வர்த்தக நாமமாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு விருதுகள் LMD இன் ஆய்வு பங்காளரான PepperCube ஆலோசகர்களின் இணையத்தள மதிப்பாய்வின் கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண்டவை.

மேல், தென், மத்திய, வடமேல் மற்றும் வட மாகாணங்களைச் சேர்ந்த LMD யின் வாசகர்கள் இந்த மதிப்பாய்வு கணக்கெடுப்பில் பங்கேற்றதுடன் மற்றும் மிகவும் விரும்பப்படும் வர்த்தக நாமங்கள் 34 பிரிவுகளின் கீழ் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

இந்த பெறுமதிமிக்க பொதுமக்களின் அங்கீகாரம் குறித்து கருத்து தெரிவித்த கொமர்ஷல் வங்கியின் சில்லறை வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் பிரதிப் பொது முகாமையாளர் திரு ஹஸ்ரத் முனசிங்க, 'மக்களின் உணர்வை அடிப்படையாகக் கொண்ட இத்தகைய விருதுகளை பணிவுடனும் நன்றியுடனும் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாங்கள் மேற்கொள்ளும் அனைத்து விடயங்களும் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளை மிஞ்சும் வகையில் உள்ளதுடன் அனைத்து பங்குதாரர் குழுக்களுக்கும் எங்கள் கடமைகளை நிறைவேற்றும் நோக்கத்துடன் அமைந்துள்ளன .இந்த தரவரிசையானது, ஒவ்வொரு கொமர்ஷல் வங்கி ஊழியருக்கும் ஊக்கமளிக்கும் ஒரு சிறந்த ஆதாரமாகவும், நாங்கள் சரியாக செயற்பாடுகளை மேற்கொள்கிறோம் என்பதை உறுதிப்படுத்துவதாகவும் உள்ளது எனக் கூறினார்.

இந்த ஆண்டின் முற்பகுதியில், கொமர்ஷல் வங்கியானது, இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் (SLIM) Kantar Peoples விருதுகளில், ஆண்டின் சிறந்த மக்கள் தனியார் வங்கியாக தெரிவு செய்யப்பட்டதுடன், UK இன் குளோபல் ஃபினான்ஸினால் இலங்கையின் சிறந்த வங்கி மற்றும் இலங்கையின் சிறந்த SME வங்கி உட்பட பல சர்வதேச மற்றும் உள்நாட்டு விருதுகளைப் பெற்றுள்ளது.

# அமீரகத்தின் 'அல்வீனா' வாசனை உற்பத்தி நிறுவனத்துடன் கைகோர்த்த 'சதாஹரித'



இலங்கையின் வணிக வனபயிர் துறையின் முன்னோடியாக திகழும் 'சதாஹரித' குழுமம் மற்றுமொரு பலமான நடவடிக்கையை முன்னெடுத்து அகவுட் தொடர்பான உற்பத்திகளை உலக சந்தையில் இணைக்கும் மற்றுமொரு நடவடிக்கையை அண்மையில் ஆரம்பித்துள்ளது. ஐக்கிய அரபு இராச்சியத்தின் மிகப்பெரிய வாசனை திரவிய தயாரிப்பு நிறுவனமான 'அல்வீனா' வாசனைத் திரவிய நிறுவனத்துடனேயே அந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

இலங்கையின் பெருந்தோட்டத் துறையில் பல தலைமுறைகளாக அனுபவத்தையும் பல வருட ஆய்வுகள் மற்றும் சோதனைகளின் மூலம் பெற்ற அறிவையும் கொண்ட 'சதாஹரித' குழுமத்தின் கௌரவத் தலைவர் திரு. சதீஸ் நவரத்ன தலைமையில் 2002 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'சதாஹரித' பெருந்தோட்ட நிறுவனமானது தேக்கு, மஹோகனி, வென் சந்தனம், ரம்புட்டான் போன்ற தாவரங்கள் பலவற்றை இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் பயிரிட்டு இந்நாட்டுக்கு தேவையான அந்நியசெலாவணியை பெற்றுக்கொள்ள பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றது. 2013 ஆம் ஆண்டில், அகவுட் செடிகளை நடும் பணிகளை செய்யத் தொடங்கி, தற்போது 8 இலட்சத்துக்கும் அதிகமான செடிகளை 'சதாஹரித' பெருந்தோட்ட நிறுவனம் கொண்டுள்ளது. ஆரம்பத்தில் 500 ஏக்கர் பரப்பளவில் நிறுவப்பட்டு, நாளுக்கு நாள் வெற்றிப்பாதையில் பயணித்த இந்த நிறுவனத்தின் தோட்டங்களில் இன்று அகவுட் செடிகள் மாத்திரம் 1360 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் பரவி, இலங்கையில் மாத்திரமன்றி வெளிநாட்டு சந்தைகளிலும் பிரகாசிக்கும் வர்த்தக நாமமாக மாறியுள்ளது.

# உள்ளடக்க மேம்பாட்டு பட்டறையுடன் முன்னே செல்லும் KOICA தொழில் வழிகாட்டல் தளம்



KOICA தொழில் வழிகாட்டல் தள திட்டமானது, முக்கியத்துவவமான தொழில் மற்றும் நிறுவனத் தகவல், வேலைவாய்ப்பு ஆகியவற்றின் ஆதரவுடன் பயிற்சியாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களை வலுவூட்டுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைச் செய்து வருகிறது. பங்குதாரர்களைப் புதுப்பிப்பதற்கும், இடம்பெற்று வரும் முயற்சிகளை முன்னிலைப்படுத்துவதற்கும், உள்ளடக்க மேம்பாட்டுப் பட்டறை நிகழ்ச்சி அறிவிக்கப்பட்டுள்ளது. KOICA தொழில் வழிகாட்டல் தளத்தின் முதன்மை குறிக்கோள், பயிற்சி பெறுபவர்களுக்கு அவர்களின் தொழில் பாதைகளை திறம்பட வழிநடத்த தேவையான கருவிகளை வழங்குவதாகும். விரிவான வேலை மற்றும் நிறுவனத் தகவல்களுக்கான அணுகல், அத்துடன் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட வேலைவாய்ப்பு ஆதரவு உள்ளடக்கம் ஆகியன இதில் அடங்குகின்றன.

அது மாத்திரமன்றி, நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களுக்குத் தகுதியான பணியாளர்களைத் தெரிவு செய்யும் வாய்ப்பை வழங்குவதன் மூலம், தொழில்துறை தேவைகளுக்கும் திறமையான நிபுணர்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதை இந்த தளம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த உள்ளடக்க மேம்பாட்டு பட்டறை ஆனது, TVET பயிற்சியாளர்களுக்கு பெறுமதியானதாக இருக்கும் என்பதுடன், பயிற்சியாளர்களின் வேலை மற்றும் நிறுவனத் தகவல்களுக்கான பயிற்சியாளர்களின் தேவைகளை, வலுவான வேலை வாய்ப்பு ஆதரவு உள்ளடக்கத்துடன் நிவர்த்தி செய்வதில் கவனம் செலுத்துகிறது.

இலங்கையில் வலுவான தொழில் வழிகாட்டல் தளம் இல்லாமை தொடர்பில் எடுத்துக் கூறிய, திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி எம். சமந்தி சேனாநாயக்க, அத்தகைய முயற்சியின் மகத்தான மதிப்பை இங்கு சுட்டிக் காட்டினார். மேலும் மாணவர்களின் திறன்களை அடையாளம் காணவும், தகவலுடன் கூடிய தொழில் தெரிவுகளை மேற்கொள்ளவும் இத்தளத்தின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

# CTC முகாமைத்துவ பணிப்பாளராக பரீஹா சுபானி நியமனம்



இலங்கை புகையிலை நிறுவனம் பிஎல்சி (CTC) 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் Fariyha Subhani நியமிப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

டிசம்பர் 2021 இல் பதவிக்கு நியமிக்கப்பட்ட மொனிஷா எபிரகாமிடமிருந்து திருமதி. Fariyha முகாமைத்துவப் பணிப்பாளராகப் பொறுப்பேற்றார். CTC இல் இணைவதற்கு முன்பு, Fariyha Upfield (Private) Limited, South & Central Asia, ஒரு முன்னணி தனியார் சமபங்கு உணவு நிறுவனத்திற்கான முகாமைத்துவப் பணிப்பாளராக பணியாற்றினார். அவர் யுனிலீவர் பிஎல்சியுடன் 28 ஆண்டுகள் கடமையாற்றியுள்ளார், அங்கு அவர் புவியியல் மற்றும் பல்வேறு FMCG வகைகளில் பல்வேறு சிரேஷ்ட தலைமைப் பதவிகளை வகித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டில், யூனிலீவருடன் சர்வதேச பணிக்காக தாய்லாந்து சென்றார், அங்கு ஹோம்கேர் அனைத்திற்கும் உலகளாவிய மற்றும் பிராந்திய வர்த்தக நாமங்களுக்கு அவர் பொறுப்பேற்றார். அவர் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நிறுவகத்தை வெற்றிகரமாக வழிநடத்தினார், பின்னர் 2006 இல் பாகிஸ்தானுக்குத் திரும்பி Unilever Pakistan Foods Ltd (UPFL) வணிகத்தை முன்னெடுத்துச் சென்றார், மீண்டும் 2009 இல் UPFL சபையில் CEO ஆனார். அதேபோல் ஐஸ்கிரீம், டீ உள்ளிட்ட உணவுப் பிரிவின் பணிப்பாளராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். நிறுவனத்திற்குள் ஒரு சிறந்த கலாசாரத்தை நிறுவவும், வணிகத்திற்கு லாபகரமான வளர்ச்சியை ஏற்படுத்தவும் அவர் உதவினார்.

இஸ்லாமபாத்தில் உள்ள QuaideAzam பல்கலைக்கழகத்தில் சர்வதேச உறவுகளில் முதுகலைப் பட்டமும், பாகிஸ்தானின் லாகூரில் உள்ள முகாமைத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாக இளங்கலைப் பட்டமும் பெற்றுள்ளார்.

# நிதித்துறையில் நிலைபேறு, டிஜிட்டல் மாற்ற முன்னோடியாக திகழும் eDoc மற்றும் eReceipts

வங்கிச்சேவை அல்லாத நிதியியல் சேவைகளை வழங்குவதில் இலங்கையில் முன்னிலை வகித்து வருகின்ற பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் பிஎல்சி (People’s Leasing & Finance PLC PLC), தனது வலையமைப்பு மட்டத்தில் PLC eDoc மற்றும் PLC eReceipts ஆகிய இரண்டு டிஜிட்டல் முயற்சிகளை ஆரம்பித்துள்ளமை தொடர்பில் அண்மையில் அறிவித்துள்ளது. தனது டிஜிட்டல் உட்கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துவதில் PLC முன்னெடுத்து வைத்துள்ள மற்றுமொரு பாரிய நகர்வாக இக்கட்டமைப்புக்கள் காணப்படுகின்றன. வாடிக்கையாளர்களின் சௌகரியத்தை அதிகரிக்கும் அதேவேளையில், தனது காபன் அடிச்சுவட்டைக் குறைக்கும் முக்கிய இலக்குடன் ஒத்திசையும் வகையில், நிலைபேற்றியல் மீது PLC இன் அர்ப்பணிப்பை இது மேலும் ஆணித்தரமாக உறுதிப்படுத்தியுள்ளது. eDoc மற்றும் eReceipt ஆகியவற்றின் ஒட்டுமொத்த தீர்வும், PLC இன் உள்ளக மென்பொருள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மேம்பாட்டு அணியால் வடிவமைக்கப்பட்டு, வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளதுடன், தொழில்நுட்பவியல் புத்தாக்கம் மற்றும் டிஜிட்டல் செயல்படுத்தல் ஆகியவற்றில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை இது காண்பிக்கின்றது.

அந்தவகையில், செயல்பாடுகளை சீரமைத்து, காகித பயன்பாட்டை குறைப்பதில் ஒரு சாதனையாக PLC eDoc காணப்படுகின்றது. புரட்சிகரமாக இத்தீர்வானது இலத்திரனியல் முறையில் ஆவணங்கள் அனைத்தையும் தங்குதடையின்றி அடையப்பெற்று, நிர்வகிப்பதற்கான ஒரு மத்திய நுழைமுகத்தினை வாடிக்கையாளர்களுக்கும், வணிகத்திற்கும் வழங்குகின்றது. பாரம்பரியமான ரசீதுகள், குறுந்தகவல் (SMS) தொடர்பாடல்கள் மற்றும் வாடிக்கையாளர்களுடனான கடித தொடர்புகள் என பல்வகைப்பட்ட ஆவணங்கள் அனைத்தையும் ஒன்றுதிரட்டி, பாவனைக்கு மிகவும் இலகுவான தளத்தில் PLC eDoc வழங்குகின்றது.

இந்த டிஜிட்டல் தளத்திற்கு இணையாக, PLC eReceipts ஆனது பாரம்பரியமான காகித ரசீதுகளுக்குப் பதிலாக, அதிநவீன தீர்வை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது. குறுந்தகவல் (SMS) செய்திகள் மற்றும் தனித்துவமான இணைய URLs மூலமாக டிஜிட்டல் வழிமுறையில் அவற்றை வழங்கும் PLC eReceipts, எங்கேயும், எப்போதும் பரிவர்த்தனைகளின் விபரங்களை உடனடியாக அறியப்பெறுவதை உறுதி செய்கின்றது.

பௌதிக பிரதிகளின் தேவையைப் போக்கி, காகித கழிவைக் குறைத்து, வாடிக்கையாளர்கள் தமது டிஜிட்டல் ரசீதுகளை தரவிறக்கம் செய்து, சௌகரியமாக பகிர்ந்துகொள்ளவும் முடியும்.

# கிழக்கின் குரல்



## கும்புறுமூலையில் நாய்கள் பராமரிப்பு நிலையம் திறந்து வைப்பு

(வாழைச்சேனை நிருபர்)



வாழைச்சேனை கும்புறுமூலையில் நாய்கள் பராமரிப்பு நிலையமொன்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானினால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை (16) வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கோறளைப்பற்று பிரதேசத்தில் காணப்படும் கட்டாக்காலி நாய்கள் பராமரிப்பின்றியும் கவனிப்பாரற்று பொது இடங்களில் நாடமாடுவதால் பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். இதனை கருத்திற் கொண்டு ஆளுநரின் ஆலோசனையுடன் கிழக்கில் முதல் முறையாக நாய்கள் பராமரிப்பு நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை,திருகோணமலை போன்ற மாவட்டங்களிலும் இவ்வாறான காப்பகங்களை திறந்து வைத்து பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளை தெரு நாய்களின் தொல்லையில் இருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் தமது உரையின் போது தெரிவித்தார்.

பராமரிப்பு நிலையத்தில் நோயுள்ள நாய்களுக்கு தடுப்பூசிகள் செலுத்துதல், காயங்களுக்கு மருந்து கட்டுதல், கருத்தடை போன்ற மருத்துவ சேவைகள் மற்றும் நாய்களை தமது வளர்புக்காக பெற்றுக் கொள்பவர்களும் பலன் பெறுவதற்கு ஏற்ற வகையில் காப்பகம் திறந்து வைக்கப்பட்டது.

கோறளைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் எஸ். நவநீதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளரும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருமாகிய என். மணிவண்ணன் கௌரவ அதிதியாகவும் மட்டக்களப்பு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பிரகாஷ் உட்பட வாழைச்சேனை சுகாதர வைத்திய அதிகாரி, கால்நடை வைத்திய அதிகாரி மற்றும் உள்ளூராட்சி திணைக்களத்தின் செயலாளர்களும் இவ் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## முஷாரப் எம்.பி.யின் நிதியுதவியில் அந்நூர் பாலர் பாடசாலைக்கு புதிய கட்டடம்

(கல்முனை விசேட நிருபர்)



திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரபின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ள மாவடிப் பள்ளி அந்நூர் பாலர் பாடசாலையின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் காரைதீவு உப பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பி. ராஜகுலேந்திரன், மாவடிப்பள்ளி ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் அப்துல் மனாப் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இதன்போது பள்ளிவாசல் பேஷ் இமாம் எம். பாரிஸ் மௌலவி விசேட துஆப் பிரார்த்தனையை மேற்கொண்டார்.

மாவடிப்பள்ளி அந்நூர் பாலர் பாடசாலைக்கென கட்டடம் ஒன்று அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி அதன் நிர்வாகத்தினரால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரபின் இணைப்பாளர் அஸாம் அப்துல் அஸீஸ் மௌலவி மேற்கொண்ட முயற்சியின் பயனாக அவர் இக்கட்டட நிர்மாணத்துக்காக தனது பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாவை முதற்கட்டமாக ஒதுக்கீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அக்கரைப்பற்றில் விற்பனை நிலையங்களில் திடீர் சோதனை

(ஒலுவில் விசேட நிருபர்)

அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக, அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் எப்.எம்.ஏ. காதர் தெரிவித்தார்.

உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் பாவனைக்குதவாத உணவுப்பண்டங்கள் விற்பனை செய்யப்படுவதாக பொது மக்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் சக்கீலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கமைய பொதுச் சுகாதார பரிசோதகர் குழுவினரால் உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள், பேக்கரிகள் என்பன திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

பரிசோதனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பாவனைக்குதவாத உணவுப் பண்டங்கள், பொருட்கள், காலவதியான பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டு அழித்தொழிக்கப்பட்டு வருவதாடு, உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். உணவு சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகாரசட்டங்கள் மற்றும் அதன் விதிமுறைகளுக்கு அமைய வேண்டுமெனவும், உணவு தயாரிப்போர், உணவு விநியோகிக்கும் இடம், பயன்படுத்தும் உபகரணம் போன்றவற்றின் தூய்மையாக வைத்திருக்க வேண்டுமெனவும், உணவகங்களில் பணியாற்றுபவர்கள் கையுறை பாவிக்க வேண்டுமென கேட்டுள்ளார்.

பாவனைக்குதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அதன் உரிமையாளருக்கெதிராக உணவு பாதுகாப்பு சட்டத்திட்டத்திற்கமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், குறித்த உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள் மூடப்படுமெனவும் தெரிவித்தார்.

## கொக்கட்டிச்சோலையில் வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பகுதியிலுள்ள வால்க்கட்டு பகுதி முதல் மணற்பிட்டி வரையிலான வீதி புனரமைப்புக்கான ஆரம்ப நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவ.சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்த நிகழ்வில் பட்டிப்பளை பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், கமநல சேவை திணைக்கள உதவி பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர், திணைக்கள அதிகாரிகள், விவசாய அமைப்புகளின் தலைவர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த வீதியானது 85 மில்லியன் ரூபா செலவில் 1.69 கிலோமீற்றர் நீளமுள்ளதாக புனரமைப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வீதியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பித்து வைக்கும் முகமாக கொங்கிறீட் இடும் பணிகளை இராஜாங்க அமைச்சர் சிவ. சந்திரகாந்தன் ஆரம்பித்து வைத்தார்.

விவசாயிகள் அதிகளவாக பயன்படுத்தப்படும் இந்த வீதியானது கடந்த 40 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படவில்லை என்பதுடன், குறித்த வீதி புனமைக்கப்படுமிடத்து 2,000 இற்கு மேற்பட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் நன்மையடைய உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிராம உத்தியோகத்தர்கள் வேலைநிறுத்தம்

## கிழக்கு மாகாண ஆசிரியர் நேர்முகப்பரீட்சையில் நற்சான்றிதழ் சமர்ப்பிக்க முடியாத நிலை

### இம்ரான் எம்.பி தெரிவிப்பு

தோப்பூர் குறூப் நிருபர்

கிராம உத்தியோகத்தர்களின் வேலைநிறுத்தம் காரணமாக கிழக்கு மாகாண ஆசிரியர் நேர்முகப்பரீட்சையில் நற்சான்றிதழ் சமர்ப்பிக்க முடியாத நிலை விண்ணப்பதாரிகளுக்கு ஏற்பட்டுள்ளதாகவும். இதனை கிழக்கு மாகாண ஆளுநர் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

கிழக்கு மாகாண பட்டதாரி ஆசிரியர் நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சை வியாழக்கிழமை ஆரம்பமாகி உள்ளது. இதன் போது கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுவது முக்கியமானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது

ஆனால் தற்போது கிராம உத்தியோகத்தர்கள் நாடு முழுவதும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால் இந்த வதிவிடச் சான்றிதழைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இந்த விடயத்தைக் கவனத்தில் கொண்டு இதற்கான மாற்று ஏற்பாடுகளை கிழக்கு மாகாண ஆளுநர் மேற்கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காத்தான்குடி பத்ரியா ஜும்ஆப் பள்ளிவாசலில் ஹாஜாஜி கந்தூரிக்கான கொடியேற்ற நிகழ்வு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)





காத்தான்குடி பத்ரியா ஜும்ஆப் பள்ளிவாயலில் 38 ஆவது வருடமாக ஹாஜாஜி கந்தூரிக்கான கொடியேற்றும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

காத்தான்குடி பத்ரியா ஜும்ஆப் பள்ளிவாசலில் வருடம் தோறும் இடம் பெற்று வரும் அஜ்மீர் ஹாஜா முயினுத்தீன் சிஷ்தி (ரழி) பெயரிலான கந்தூரி நிகழ்வின் 38 வது வருட கந்தூரி நிகழ்வுக்கான ஆரம்ப நாள் கொடியேற்றம் நடைபெற்றது.

இந்த கந்தூரி நிகழ்வு காத்தான்குடி அப்துல் ஜவாத் ஆலிம் வலியுல்லாஹ் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் மௌலவி ஏ.ஜே.அப்துர் ரஊப் மிஸ்பாஹி தலைமையில் இடம்பெற்றது.

இதில் கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.கே.குலதுங்க. இந்திய தூதரகத்தின் கொன்சிலர் சன்சீவ் அரோரா மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே. முரளிதரன் மட்டக்களப்பு கல்லடி 243 வது ராணுவ முகாம் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சந்திமால் குமார் சிங்க மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் எதிரிமான உட்பட பாதுகாப்பு உயரதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது தேசியக் கொடி மற்றும் கந்தூரி கொடி என்பன ஏற்றி வைக்கப்பட்டன.

காத்தான்குடி நகர சபையின் பிரதிதவிசாளர் எம்.எம்.ஜெஸீம் உட்பட உலமாக்கள் என பலரும் கலந்து கொண்டனர். இதனையடுத்து பிராத்தனை நிகழ்வும் நடைபெற்றது

தொடர்ந்து இங்கு ஐந்து தினங்களுக்கு மௌலூது மற்றும் மார்க்க உரைகள் உட்பட பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்ற எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமையன்று அன்னதானம் வழங்கப்பட்டு கந்தூரி நிறைவு பெறவுள்ளது.

## 36 வருட கல்விச் சேவையிலிருந்து ஆசிரிய ஆலோசகர் மன்சூர் ஓய்வு!

(காரைதீவு குறூப் நிருபர்)



சம்மாந்துறை வலய தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் இசட். எம். மன்சூர் தனது 60ஆவது வயதில் ஓய்வுபெறுவதையிட்டு வலயக்கல்விப் பணிமனையில் பிரிவுபசாரநிகழ்வு நேற்று முன்தினம் (16) வியாழக்கிழமை இடம்பெற்றது.

சம்மாந்துறை வலய கல்வி சார் உத்தியோகத்தர்களின் நலன்புரி ஒன்றிய தலைவரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான விபுலமாமணி தேசமான்ய வி.ரி.சகாதேவராஜா தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது

சம்மாந்துறை வலய நிருவாக பிரதிக் கல்விப்பணிப்பாளர் எம். வை.யாசீர் அரபாத் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி நிலோபரா, எச்.நைரூஸ்கான், பி. பரமதயாளன் உள்ளிட்ட கல்வி சார் உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.

ஓய்வுபெறும் ஆசிரியஆலோசகர் மன்சூர் தொடர்பாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ,வலய கணினி நிலையப் பொறுப்பதிகாரி ஜலீல், உதவிக்கல்விப்பணிப்பாளர் எம் எம் எம். ஜெளபர் ஆகியோர் உரையாற்றினர்.ஆசிரிய ஆலோசகர் றிஸ்வி கவிதையாற்றி வாசித்தார்.

மன்சூரின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டி பணிப்பாளர் அரபாத் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

11 வருட காலம் ஆசிரியர் பணியும் 25 வருட காலம் ஆசிரியர் ஆலோசகர் பணியையும் நிறைவு செய்து நேற்று ஓய்வு பெறும் Z.M. மன்சூர் நல்லதொரு கவிஞராவார்.

ஆசிரிய ஆலோசகர் மன்சூர் ஏற்புரைநிகழ்த்துகையில் தான் 36வருடங்களுக்குமேல் கல்விச்சேவையாற்றியதாகவும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் யாருடனும் முரண்படவில்லை. மாறாக அனைவரும் ஒத்துழைப்பு நல்கியதாக நன்றி கூறினார்.

## உலக உயர் இரத்த அழுத்த தினத்தை முன்னிட்டு வர்த்தகர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்வு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய ஏற்பாட்டில் உங்கள் இரத்த அழுத்தத்தை துல்லியமாக அளவிட்டு அதனை கட்டுப்படுத்தி நீண்டகாலம் உயிர் வாழுங்கள்" என்ற தொனிப்பொருளில் உலக உயர் இரத்த அழுத்த தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

அக்கரைப்பற்று பொதுச்சந்தையிலுள்ள வர்த்தகர்களுக்கான தொற்றா நோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று (17) காலை அக்கரைப்பற்று பொதுச்சந்தையில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஷகீலா இஸ்ஸதீனின் ஆலோசனையில், அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எப்.எம்.ஏ.காதரின் தலைமையில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்வில் வர்த்தகர்களின் குருதி அமுக்கம், எடை ஆகியவை பரிசோதனை செய்யப்பட்டது.

உயர் குருதி அழுத்தத்தால் குறிப்பாக, எமது சமூகத்திலுள்ள வர்த்தகர்கள் வயது பாகுபாடு இன்றி பல தொற்றா நோய்களுக்குள்ளாகின்றார்கள். அதில் பிரதானமாக மாரடைப்பு, பக்கவாதம், மூளையினுள் குருதிக் குழாய்களில் ஏற்படும் வெடிப்பு போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. இவற்றினால் குறிப்பிட்ட நபருக்கும் அவரது குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் மற்றும் நாட்டுக்கும் ஈடு செய்ய முடியாத பல இழப்புக்கள் ஏற்படுகின்றன.

எனவே எமது உடலில் குருதி அமுக்கத்தினை அடிக்கடி பரிசோதனை செய்து கொள்வதுடன் உயர் குருதி அமுக்கமுள்ளவர்கள் அதற்கான சிகிச்சையினை தொடர்ச்சியாக பின்பற்ற வேண்டும் என்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் காதர் வர்த்தகர்களுக்கு மத்தியில் உரையாற்றினார்.

இந்நிகழ்வில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள், சுகாதார ஊழியர்கள், வர்த்தகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# டி20 உலகக் கிண்ணத்திற்கு முன்னர் இலங்கைக்கு இரு பயிற்சி போட்டிகள்

டி20 உலகக் கிண்ண போட்டிக்கான பயிற்சி போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் மே 27 தொடக்கம் ஜூன் 1 ஆம் திகதி வரை அமெரிக்கா மற்றும் டிரினிடாட் மற்றும் டொபாகோவில் பயிற்சிப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

உலகக் கிண்ணத்தில் பங்கேற்கும் 20 அணிகளில் 17 அணிகள் மொத்தம் 16 பயிற்சிப் போட்டிகளில் இடம்பெறவுள்ளன. இதில் இலங்கை அணி இரண்டு பயிற்சிப் போட்டியில் ஆடவுள்ளது. இந்தப் பயிற்சிப் போட்டிகள் டெக்சாஸ், புளோரிடா மற்றும் டினிடாட் மற்றும் டொபாகோவில் உள்ள குவின்ஸ் பார்க் ஓவல் மற்றும் பிரையன் லாரா கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளன.



இந்த பயிற்சிப் போட்டிகள் சர்வதேச டி20 அந்தஸ்தை பெறாது என்பதோடு ஒவ்வொரு அணியும் தமது அணியில் உள்ள 15 வீரர்களையும் போட்டியில் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுகிறது.

கடந்த மே 14 ஆம் திகதி அமெரிக்கா புறப்பட்டுச் சென்ற இலங்கை அணி எதிர்வரும் மே 28 ஆம் திகதி நெதர்லாந்து அணிக்கு எதிராக முதல் பயிற்சிப் போட்டியில் ஆடவுள்ளது. இந்தப் போட்டி புளோரிடா, கிராண்ட் பெரைரி கிரிக்கெட் அரங்கில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து எதிர்வரும் மே 31 ஆம் திகதி இலங்கை அணி அயர்லாந்து அணியை இரண்டாவது பயிற்சிப் போட்டியில் எதிர்கொள்ளவுள்ளது. இந்தப் போட்டி புளோரிடாவில் உள்ள பிரோவாட் கௌண்டி அரங்கில் நடைபெறும்.

டி20 உலகக் கிண்ணம் அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் எதிர்வரும் ஜூன் 1 தொடக்கம் 29 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

ஆரம்ப சுற்றில் டி குழுவில் இடம்பெற்றிருக்கும் இலங்கை அணி முதல் போட்டியில் எதிர்வரும் ஜூன் 3 ஆம் திகதி தென்னாபிரிக்க அணியை எதிர்கொள்ளவுள்ளது. இந்த ஆட்டம் நியூயோர்க்கில் நடைபெறும்.

# குசலின் விசா தாமதம் குறித்து இலங்கை கிரிக்கெட் விளக்கம்



டி20 உலகக் கிண்ணப் போட்டிக்காக அமெரிக்கா செல்வதற்கான இலங்கை வீரர் குசல் மெண்டிஸின் விசா நிராகரிக்கப்பட்டதாக வெளியான செய்தியை இலங்கை கிரிக்கெட் சபை மறுத்துள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட இலங்கை கிரிக்கெட் தலைமை நிர்வாக அதிகாரி ஆஷ்லி டி சில்வா, குசல் மெண்டிஸின் அமெரிக்க விசா நிராகரிக்கப்படவில்லை என்றும் அது செயற்பாட்டில் இருப்பதாகவும் விளக்கினார்.

அவருக்கு அடுத்த ஓர் இரு நாட்களில் அமெரிக்கா செல்வதற்கான விசா கிடைத்துவிடும் என்று எதிர்பார்ப்பதாகவும் அஷ்லி டி சில்வா மேலும் தெரிவித்தார்.

'விசாவை பெறுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதோடு அமெரிக்க தூதரகம் வீரருடன் தொடர்பில் உள்ளது. விசா செயற்பாட்டில் உள்ளது. தூதரகம் வீரரிடம் மேலதிக விபரங்களை கேட்டுள்ளது' என்று அவர் கூறினார்.

கிரிக்கெட் வீரருடன் தொடர்புபட்ட சம்பவம் ஒன்று குறித்து அமெரிக்க தூதரகம் விபரங்களை கேட்டிருப்பதாகவும் ஆஷ்லி டி சில்வா தெரிவித்தார். இந்த கிரிக்கெட் வீரருடன் தொடர்புபட்டு 2020 இல் பாணந்துறையில் இடம்பெற்ற விபத்து ஒன்று தொடர்பிலேயே அமெரிக்க தூதரகம் விளக்கம் கேட்டிருப்பதாக தொடர்புபட்ட வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் நடைபெறும் டி20 உலகக் கிண்ணத்தில் பங்கேற்பதற்காக இலங்கை அணி ஏற்கனவே அமெரிக்காவுக்கு புறப்பட்டுச் சென்றிருக்கும் நிலையில், குசல் மெண்டிஸினால் இன்னும் அணியுடன் இணைய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை விசாவில் தாமதம் ஏற்பட்டிருந்த மற்றொரு வீரரான அசித்த பெர்னாண்டோவின் விசா கிடைத்திருக்கும் நிலையில் அவர் விரைவில் அமெரிக்கா புறப்பட்டுச் செல்லவுள்ளார். அசித்த பெர்னாண்டோ மேலதிக வீரராகவே இலங்கை அணியுடன் இணையவுள்ளார்.

# காசாவில் தற்காலிக துறைமுகம்: முதலாவது உதவி கப்பல் வருகை



காசா கடற்கரையில் அமெரிக்கா அமைத்திருக்கும் தற்காலிக துறைமுகத்திற்கு முதலாவது உதவி கப்பல் வந்திருப்பதாக அமெரிக்க இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இந்த உதவிக் கப்பல் கரையை நோக்கி நகர்ந்ததாக அமெரிக்க மத்திய கட்டளையகம் எக்ஸ் சமூகதளத்தில் உறுதி செய்துள்ளது.

'இது முழுக்க முழுக்க மனிதாபிமானம் கொண்ட கடல் வழித்தடத்தின் வழியாக காசாவில் உள்ள பாலஸ்தீன குடிமக்களுக்கு கூடுதல் உதவிகளை வழங்குவதற்கான ஒரு பன்னாட்டு முயற்சியாகும்' என்று அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளது. எனினும் எந்த அமெரிக்க துருப்பும் காசா கரைக்கு செல்லவில்லை என்றும் அது சுட்டிக்காட்டியது.

காசாவில் இஸ்ரேல் தொடர்ந்து இராணுவ நடவடிக்கையை முன்னெடுக்கும் நிலையில் அங்கு மனிதாபிமான உதவிகள் செல்வதற்கு வசதியாக இந்த மிதக்கும் தளத்தை அமெரிக்கா சில வாரங்களுக்கு முன் கட்ட ஆரம்பித்தது.

இந்நிலையில் நூற்றுக்கணக்கான தொன் உதவிகள் சைப்ரஸை சென்றிருப்பதாகவும் அவை சோதனைக்கு பின் கப்பலில் ஏற்றப்பட்டு இந்த தற்காலிக துறைமுகத்திற்கு அனுப்பப்படவிருப்பதாகவும் கடந்த புதனன்று செய்தி வெளியானது.

ஆனால், காசாவில் மனிதநேய நெருக்கடியைத் தீர்க்க நில எல்லைகளைத் திறப்பதே சிறந்த வழி என்று ஐக்கிய நாட்டுகள் அமைப்பு கூறி வருகிறது.

## சர்வதேச செய்திகள்

# இஸ்ரேலுக்கு ஆயுதம் அனுப்ப அமெ. பாராளுமன்றில் ஆதரவு



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இஸ்ரேலுக்கான வெடிகுண்டுகளை நிறுத்தி வைத்திருப்பதை கண்டித்து இஸ்ரேலுக்கு ஆயுதங்களை வழங்க கட்டாயப்படுத்தும் குடியரசு கட்சியினர் தலைமையில் கொண்டுவரப்பட்ட சட்டமூலம் ஒன்று அமெரிக்க பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பெரும்பாலும் கட்சி அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட இஸ்ரேலிய பாதுகாப்பு உதவி ஆதரவுச் சட்டம் 224–187 வாக்குகளால் அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் நேற்று முன்தினம் (16) நிறைவேற்றப்பட்டது. பெரும்பான்மை குடியரசுக் கட்சியினர் ஆதரவு அளித்த இந்த சட்டமூலத்திற்கு ஆளும் ஜனநாயகக் கட்சியின் 16 உறுப்பினர்கள் ஆதரவு வழங்கி இருந்தனர். மறுபுறம் மூன்று குடியரசு கட்சியினர் எதிராக வாக்களித்திருந்தனர்.

இது சட்டமாகும் என்று எதிர்பார்க்கப்படாதபோதும், அமெரிக்காவின் தேர்தல் ஆண்டில் இஸ்ரேலுடனான உறவு தொடர்பில் பெரும் தாக்கத்தை செலுத்துவதாக பார்க்கப்படுகிறது.

காசாவில் போர் நீடிக்கும் நிலையில் எதிர்க்கட்சி இதனை வைத்து அரசியல் செய்வதாக ஜனநாயக கட்சியினர் குற்றம்சாட்டி இருப்பதோடு, குடியரசு கட்சியினர் இஸ்ரேல் தொடர்பில் பைடனின் நிலைப்பாட்டை சாடி வருகின்றனர்.

காசாவில் சனநெரிசல் மிக்க ரபா மீதான தாக்குதலை எதிர்த்து வரும் அமெரிக்கா அந்த பகுதியில் படை நடவடிக்கையை முன்னெடுத்தால் ஆயுதங்களை நிறுத்துவதாக பைடன் இஸ்ரேலை எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீன பொருட்களுக்கு அதிக வரி விதிக்க அமெரிக்கா நடவடிக்கை



சீனாவில் இருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் இலத்திரனியல் வாகனங்கள் உள்ளிட்ட ஏனைய பொருட்களுக்கு அதிகரித்த வரியை விதிப்பதற்கு ஜனாதிபதி ஜோ பைடன் உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்க தொழிலாளர்களையும் வர்த்தகங்களையும் பாதுகாக்கவென ஜனாதிபதி பைடன் தமது வர்த்தகப் பிரதிநிதிகளுக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதற்கு அமைய சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் இலத்திரனியல் வாகனங்கள், சூரிய சக்தி கலங்கள், பட்டரிகள் உள்ளிட்ட 18 பில்லியன் டொலர்கள் பெறுமதியான பொருட்களுக்கு அதிகரித்த வரிகள் விதிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

தொழில்நுட்ப பரிமாற்றம், புலமைத்துவ சொத்துக்கள் மற்றும் புத்தாக்கங்களில் அமெரிக்காவின் வர்த்தகங்களுக்கும் தொழிலாளர்களுக்கும் சீன வர்த்தக நடவடிக்கைகள் சவாலாக அமைந்துள்ளன. குறிப்பாக சீனாவின் செயற்கையான குறைந்த விலை ஏற்றுமதிகள் உலகளாவிய சந்தைகளை பெரிதும் ஆக்கிரமித்துள்ளது. இவ்விதமான வர்த்தக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் அதன் விளைவான பாதிப்புகளுக்கு முகம் கொடுப்பதற்கு ஏற்ற வகையிலும் அமெரிக்க வர்த்தக சட்டத்தின் கீழ் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வெள்ளை மாளிகை சுட்டிக்காட்டியுள்ளது.

# ரபா தாக்குதலை தீவிரப்படுத்த இஸ்ரேல் உறுதி: காசாவில் மோதல்கள் அதிகரிப்பு

## தாக்குதலை நிறுத்த சர்வதேச நீதிமன்றத்திலும் கோரிக்கை

இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் காசா நகரான ரபாவில் சர்வதேச எச்சரிக்கையையும் மீறி தரைவழித் தாக்குதலை தீவிரப்படுத்தப்போவதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ள நிலையில் நேற்று மோதல் உக்கிரம் அடைந்திருந்தது.

ரபா மீதான இஸ்ரேலின் தாக்குதலை உடன் நிறுத்த உத்தரவிடும்படி சர்வதேச நீதிமன்றத்தை தென்னாபிரிக்கா கோரிய நிலையில், அந்தக் கோரிக்கைகளை எதிர்ப்பதாக இஸ்ரேல் வாதிட்டுள்ளது.

வடக்கு காசாவில் ஜபலியா அகதி முகாமைச் சூழ கடந்த வியாழக்கிழமை இரவு தொடக்கம் கடும் மோதல்கள் இடம்பெற்று வருவதாக பார்த்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஜபலியாவைச் சூழ இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் தாக்குதல் நடத்தும் அதே நேரம் அந்த முகாமில் உள்ள கமால் அத்வான் மருத்துவமனைக்கு அருகில் இருக்கும் வீடுகள் மீது பீரங்கி தாக்குதல்களை நடத்தி வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜபலியாவில் உள்ள வீடு ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து அங்கிருந்து ஆறு சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் காயமடைந்தவர்கள் அப்புறப்படுத்தப்பட்டதாகவும் காசா சிவில் பாதுகாப்பு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

அல் பலூஷா வீதியில் உள்ள ஷபான் குடும்ப வீட்டின் இடிபாடுகளில் சிக்கி இருப்பவர்களை மீட்க மீட்புக் குழுவினர் முயற்சித்து வருகின்றனர் என்றும் அது கூறியது.

1.4 மில்லியன் பலஸ்தீனர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் எகிப்துடனான எல்லையில் இருக்கும் ராப மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் தாக்குதல் நடத்துவதாக பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

'ரபா எல்லைக் கடவைக்குள் நிலைகொண்டுள்ள எதிரிப் படைகளை இலக்கு வைத்து மோட்டார் செல் தாக்குதல்களை நடத்தியதாக பலஸ்தீன ஆயுதப் பிரிவான இஸதீன் அல் கஸ்ஸாம் படை வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் ரபாவில் தரைவழி தாக்குதலை தீவிரப்படுத்துவதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது. எனினும் ரபா மீதான முழு அளவிலான தரைவழி நடவடிக்கையை நிறுத்தி வைக்கும்படி இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளியான அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுத்து வருகின்றன.

எனினும் கடந்த வியாழக்கிழமை (16) பேசிய இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன்ட், 'ரபா பகுதிக்கு மேலதிக துருப்புகள் நுழையும் என்பதோடு இந்த நடவடிக்கை தீவிரப்படுத்தப்படும்' என்றார்.

ஹமாஸை அழிப்பது மற்றும் ஒக்டோபர் 7 தாக்குதல் மீண்டும் நிகழாமல் இருப்பதை தடுப்பதற்கான இராணுவ நடவடிக்கையின் தீர்க்கமான பகுதியாக ரபா தரைவழி தாக்குதல் உள்ளது என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நேற்று முன்தினம் வலியுறுத்தியுள்ளார்.



'ரபா போர் தீர்க்கமானது, இது அவர்களின் எஞ்சிய படைகளுக்கு மாத்திரமன்றி, தப்பித்து மீள்வதற்கு அவர்களுக்கு இது ஒட்சிசன் போன்றது' என்றார்.

ராபாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டதை அடுத்து அங்கிருந்து வெளியேறும் பலஸ்தீனர்கள் கரையோரப் பகுதியான அல் மவாசியில் அடைக்கலம் பெற்று வருகின்றனர். இந்தப் பகுதி 'மனிதாபிமான வலயம்' என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

தெற்கின் பிரதான நகரான கான் யூனிஸுக்கு அருகில் இருக்கும் இந்தப் பகுதியில் கூடாரங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது புதிய செய்மதி படம் ஒன்று காட்டுகிறது.

இடம்பெயர்ந்த பலரும் 'எந்த ஒரு வளமும் இன்றி சோர்வடைந்து பயத்தில் உள்ளனர்' என்று சர்வதேச மருத்துவப் படை அமைப்புக்கான காசாவுக்கு பொறுப்பாக உள்ள ஜாவிட் அலி குறிப்பிட்டுள்ளார்.

ஒரு வாரத்திற்கு முன் ரபாவில் இஸ்ரேல் படை நடவடிக்கையை ஆரம்பித்தது தொடக்கம் அங்கிருந்து இதுவரை ஆறு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் மீண்டும் ஒருமுறை வெளியேறியுள்ளனர். மறுபுறம் வடக்கு காசாவில் இஸ்ரேலின் படை நடவடிக்கையால் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

காசாவில் இஸ்ரேல் முற்றுகையை தொடரும் நிலையில் அங்கு உணவு, நீர், மருந்து மற்றும் எரிபொருள் அனைத்துக்கும் கடும் தட்டுப்பாடு இருந்து வருகிறது. மறுபுறம் காசாவுக்கு உதவிப் பொருட்களை எடுத்துச் செல்லும் லொறிகள் மீது ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள இஸ்ரேலிய குடியேறிகள் மீண்டும் ஒருமுறை தாக்குதல் நடத்தி தீ வைத்துள்ளனர்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலை அடுத்து வெடித்த காசா போரில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 31 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு 56 பேர் காயமடைந்ததாக காசா சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது.

இதன்படி காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 35,303 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 29,261 பேர் காயமடைந்துள்ளனர்.

பஹ்ரைனில் நேற்று முன்தினம் நிறைவடைந்த 22 உறுப்பு நாடுகளைக் கொண்ட அரபு லீக் மாநாட்டில், காசாவில் உடன் போர் நிறுத்தம் ஒன்றுக்கு வலியுறுத்தி இருப்பதோடு மக்கள் வெளியேற்றப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

'பலஸ்தீன பகுதிகளில் சர்வதேச பாதுகாப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் படை நிலைநிறுத்தப்பட வேண்டும்' என்றும் அரபு லீக்கின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை ஹேகில் உள்ள ஐக்கிய நாடுகளின் உயர் நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா தொடுத்துள்ள இஸ்ரேலுக்கு எதிரான இனப்படுகொலை வழக்கு விசாரணை நேற்றும் (17) தொடர்ந்தது. இதில் ரபா மீதான படை நடவடிக்கையை இஸ்ரேல் உடன் நிறுத்துவதற்கும் பலஸ்தீன நிலத்தில் இருந்து இஸ்ரேல் படைகள் முழுமையாக வாபஸ் பெறுவதற்கு உத்தரவிடும்படி தென்னாபிரிக்கா நீதிமன்றத்தை கோரிய நிலையில் இஸ்ரேல் நேற்று தன் பக்க நியாயத்தை வாதிட்டது.

இஸ்ரேலிய நீதித் துறை அமைச்சின் கிலாட் நொவாம், தென்னாபிரிக்காவின் இந்த வழக்கு, உண்மை மற்றும் சூழ்நிலையில் இருந்து முற்றிலும் விலகி இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

'இனப்படுகொலை என்ற கொடூர குற்றச்சாட்டை (இந்த வழக்கு) கேலி செய்கிறது' என்று அவர் நீதிமன்றத்தின் முன் குறிப்பிட்டார்.

முன்னதாக நீதிமன்றத்தில் வாதிட்ட தென்னாபிரிக்க வழக்கறிஞர் வோகன் லோவே, 'ரபா படை நடவடிக்கை காசா மற்றும் அங்குள்ளவர்களை அழிப்பதற்கான கடைசி படி' என்றார்.

'ரபா தான் தென்னாபிரிக்காவை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தது. ஆனால், ஒரு தேசியம், இனம் மற்றும் இனக் குழுவான அனைத்து பலஸ்தீனர்களையும் இனப் படுகொலையில் இருந்து பாதுகாப்பதற்கு நீதிமன்ற உத்தரவால் முடியுமாக உள்ளது' என்றும் அவர் கூறினார்.